# குற்றங்கள் அற்ற ஒழுங்கான சமூகத்தின் உதயத்திற்காக....





பஃவ்ரல் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canadian International Development Agency

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களற்ற நல்லொழுக்கமிகு சமூகமொன்றுக்காக

**பஃவ்ரல்**

**ஆசிரியர்:**
அசோக்க மந்திர பளிவடன

**வெளியீடு:**
சுதந்திரமானதும் நீதியானதுமான
தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு,
12/3, ரொபர்ட் ரெரஸ்,
ரொபர்ட் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 06.

(இந்த வெளியீட்டின் முழு உரிமையும்
பெவ்ரல் அமைப்பிற்கு உரித்தாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 03-04 |
| ஒரு கணம் சிந்தியுங்கள் | 05-07 |
| குற்றச்செயல்களுக்குத் தூண்டுதலளிக்கும் காரணிகள் | 09-26 |
| இலங்கையில் குற்றச்செயல்கள் தொடர்பான தற்போதைய நிலைமை | 27-32 |
| குற்றச்செயல்களைத் தடுப்பதில் தனிநபரின் செயற்பொறுப்பு | 33-45 |
| குற்றச்செயல்களைத் தடுப்பதில் சிவில் அமைப்புக்களின் செயற்பொறுப்பு | 46-49 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பெவ்ரல்) சுமார் கடந்த இரு தசாப்த காலமாக இலங்கை மக்களின் சனநாயக உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் தொழிற்படு ரீதியில் தலையீட்டை மேற்கொண்ட ஒரு நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக, தேர்தல் காலங்களில் சுதந்திரமாகவும் நீதியாகவும் நமது விருப்பைத் தெரிவிப்பதற்கான உரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் பெவ்ரல் இயக்கத்தினால் ஆற்றப்பட்ட தொழிற்படு ரீதியான தலையீட்டை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள்.

பல்வேறு விதமான குற்றச்செயல்களும், வன்செயல்களும் சமூகத்தில் வேரூன்றியமை கடந்த காலப்பகுதி முழுவதும் எமது நாட்டில் அவதானிக்கக் கூடியதாகவிருந்த ஒரு போக்காகும். அது சனநாயக சமூகமொன்றின் இருப்பின் மீது பெருமளவுக்கு பாதக விளைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையாகும் என்பதைக் கூறவேண்டியதில்லை. சமூகத்தில் நிலவும் அத்தகைய வன்செயல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கெனில், அவற்றுக்கு அடிப்படையாக அமையும் காரணிகள் குறித்த புரிந்துணர்வொன்றை ஏற்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்.

குற்றச்செயல்களும், அவற்றுக்கு அடிப்படையாக அமையும் காரணிகளும் குறித்தும், அவற்றைத் தடுத்துநிறுத்துவதற்கு தனிநபர்களாகவும், சிவில் அமைப்புக்களாகவும் ஆற்றக்கூடிய பணி குறித்தும் புரிந்துணர்வொன்றை வாசகர்களாகிய உங்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இந்த நூலினூடாக எதிர்பார்க்கப்படுவதாகும். இது எமது அமைப்பினால் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தொடர் செயலமர்வுகளுக்கு இணையாக அமையும் ஒரு வெளியீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல்களிலின்றிய ஒரு சமூகம் என்பது நம் அனைவரினதும் கூட்டு முயற்சியின் பெறுபேறாகும்.

அந்த உயரிய பணிக்காக தொழிற்படு ரீதியில் பங்களிப்பு நல்குவதற்கு சமூகத் தலைவர்கள் என்ற வகையிலும், சிவில் சமூகத்தின் பிரசைகள் என்ற வகையிலும் உங்கள் அனைவருக்கும் பலம் கிட்ட வேண்டுமென பெவ்ரல் இயக்கம் சார்பாக பிரார்த்திக்கின்றேன்.

**கிங்ஸ்லி ரொத்ரிகோ**
தவிசாளர்
பெவ்ரல் இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கணம் சிந்தியுங்கள்...

**குற்றச்செயல்கள் (Crimes) * மலிந்த ஒரு சமூகத்தின் மத்தியில்**
**நீங்கள் வாழ்வீர்களாயின்...**

**உங்கள் உயிர்வாழ்வதற்கான உரிமைக்கு அச்சுறுத்தலாக அமையும்.**

நீங்கள் வாழ்வது பயங்கர குற்றச்செயல்கள் மிகுந்த ஒரு சமூகத்திலாயின், தெளிவாகவே அது உங்கள் உயிர்வாழ்வதற்கான உரிமையை எந்தவொரு வேளையிலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கக்கூடிய ஒரு சூழலாகும். வேறு வார்த்தையில் கூறுவதாயின், ஏனையோரின் உயிர்வாழ்வதற்கான உரிமை குற்றச்செயலிநர்களால் (Criminals)* நிர்ணயிக்கப்படும் ஒரு சமூகமாகும்.

**உங்கள் உளச் சுதந்திரத்திற்கு தடங்கலை ஏற்படுத்தும்.**

அத்தகைய ஒரு சூழலில் எப்பொழுதும் ஐயத்துக்கும் பீதிக்கும் மத்தியில் வாழ நேரிடும். அது ஏனையவர்களுக்கு ஏற்பட்ட பல்வேறுபட்ட இடையூறுகள் தமக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற உணர்வினால் எப்பொழுதும் உள்ளம் தூண்டப்படுவதன் காரணத்தினாலாகும்.

**உங்கள் பொருளாதார சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும்.**

தமது உழைப்பை ஈடுபடுத்தி யாதேனும் பொருளாதார பலமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு இந்தச் சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஆளெவருக்கும் உரிமை உள்ளது. எனினும், நீங்கள் வாழ்வது திருடர்களும் கொள்ளைக்காரர்களும் மலிந்த ஒரு சூழலிலாயின், உங்களால் பெரிதும் பிரயாசைப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட பொருளாதார பலத்திற்கு எந்தவொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்ட பொருளாதார பலத்திற்கு எந்தவொரு வேளையிலும் அத்தகையவர்களால் அச்சுறுத்தலொன்று ஏற்படலாம்.

**உங்கள் உரிமைகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கும்.**

நீங்கள் வாழ்வது குற்றச்செயலிநர்கள் சட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சமூகத்திலாயின், உங்கள் அரசியல் உரிமைகள், மனித உரிமைகள், கருத்து வெளியீட்டு ஆற்றல், சுருங்கக்கூறின் சிந்தனைச் சுதந்திரம்கூட அந்தச் சமூகத்தின் மத்தியில் மட்டுப்படுத்தப்படும். உதாரணமாக, அத்தகைய ஒரு சூழலில் அரசியல்வாதிகள் வாக்குப் பலத்தை முறியடித்து காடையர் கும்பல்களின் பலத்தால் பதவிக்கு வரலாம். அதற்கு எதிராகத் துணிவுடன் எழுந்து நிற்பதற்கு எவ்விதத்திலும் அவர்களிடமிருந்து வாய்ப்பு கிட்டாது.

**முன்னேற்றத்திற்குப் பதிலாக சீரழிவை நோக்கி சமூகம் பயணிக்கும்.**

தமது வாழ்வு பற்றிய அச்சத்துடனும் பீதியுடனும் மக்கள் வாழ நேரிடுகின்றதும், சகல உரிமைகளும் மட்டுப்படுத்தப்படுகின்றதும், அவர்களின் பொருளாதார வளர்ச்சியின் மீது அச்சுறுத்தலொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான ஒரு சமூகத்தின் முன்னேற்றம் குறித்து எவ்விதத்திலும் எதிர்பார்ப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. அத்தகைய ஒரு சமூகம் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்குப் பதிலாக பின்னடைவை நோக்கியே பயணிக்கும். காடையர் கும்பல்களின் பலமும் ஆயுத பலமும் அரசோச்சும் வறிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் இத்தகைய ஒரு நிலையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீ**தியோரத்தில் விளையாட்டுத் துப்பாக்கியொன்றைக் கையில் ஏந்தியவாறு விளையாடும் ஒரு 5 வயதுச் சிறுவன்... அவன் வீதியில் பயணிக்கும் பிரயாணிகளை நோக்கி அடிக்கடி வாயால் ஓசை எழுப்பியவனாக "துப்பாக்கி வேட்டுக்களைத்" தீர்க்கிறான். வீதியில் பிரயாணம் செய்யும் பெரும்பாலானோர் அது பற்றிக் கவனிக்காமல் செல்கின்றனர். ஒரு தடவை வழிப்போக்கன் ஒருவன் அந்தச் சிறுவனை நோக்கிச் சிரித்துவிட்டுச் செல்கிறான். அப்போது அவன் மாறிமாறி தனது விளையாட்டுத் துப்பாக்கியையும் தனது தாயையும் பெருமிதத்துடன் நோக்குகிறான். சிலவேளைகளில், அது அவனது தந்தை அல்லது தாயினால் அந்தச் சிறுவனுக்குப் பரிசாக அளிக்கப்பட்ட துப்பாக்கியாக இருக்கலாம். போர் முறுகல்களும் வன்செயலும் மிகுந்த ஒரு சமூகச் சூழலில் அத்தகைய ஒரு காட்சி சிறுபிள்ளைகள் அடங்கலாக அனைவரினதும் வாழ்வில் ஓர் அங்கமாக மாறியுள்ள விதம் இதிலிருந்து தெளிவாகின்றது. கடந்த சுமார் 3 தசாப்த காலத்துள் எமது சமூகத்தில் வன்செயல்களும் குற்றச்செயல்களும் துரித கதியில் அதிகரித்துச் சென்றுள்ளதை மிகத் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது வன்செயல்களும், குற்றச்செயல்களும் மிகத் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட இலங்கை இந்தக் காலப்பிரிவில் அத்தகைய சம்பவங்களில் உயர்ந்த பெறுமானமொன்றை வகிக்கும் ஒரு நாடாக மாறியது.

> ▸▸ குற்றச்செயலின் தாய் வறுமையென்றால் அதன் தந்தை அறியாமையாகும்.
>
> ▸▸ அதிகளவான சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பது, அதிகளவான ஊழல்கள் மலிந்த நாட்டிலாகும்.
>
> ▸▸ அநீதியான சட்டம் எனப்படுவது இம்சையின் மற்றுமொரு வடிவமாகும்.
>
> - *மகாத்மா காந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலவாதி தன்னைப் பற்றியே சிந்திக்கிறான். மற்றையோரின் துன்பங்கள், கவலைகள் பற்றிச் சிந்திக்குமளவுக்கு காலமோ தேவையோ சுயநலவாதிக்கு இருப்பதில்லை. துன்புறுத்தும் செயல்களைப் (குற்றச்செயல்கள்) புரிவோன் அத்தகைய சுயநலவாதியாவான்.

ஒருவனிடம் சுயநலம் குறைவாக இருக்கும் அளவிற்கு அவனால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தும் செயல்களும் குறைவாகவே இருக்கும் என்பது உறுதி. சுயநலம் முற்றாக நீங்கின் எந்தவொரு துன்புறுத்தும் செயலும் அவனால் மேற்கொள்ளப்பட மாட்டா. அத்தகைய மனிதர்கள் வாழும் ஒரு சமூகமும் துன்புறுத்தும் செயல்களற்ற உயர்ந்த ஒரு சமூகமாக விளங்கும்.

***கலாநிதி ஈ. டபிள்யு. அதிகாரம்***
*"சித்துவிலி பொத் புர - எளியென் அந்துரட்ட" எனும் நூலில் "துன்புறுத்தும் செயல்கள்" என்ற கட்டுரையிலிருந்து...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களுக்குத் தூண்டுதலளிக்கும் காரணிகள்

மனிதர்களைக் குற்றச்செயலிநராக மாற்றுவதில் முக்கிய பங்களிப்பாற்றுவது, அவர்கள் வாழும் சமூகச் சூழலாகும். ஓர் அப்பாவிப் பிள்ளையைக்கூட படுபாதக குற்றவாளியாக ஊட்டி வளர்ப்பதற்கு அவசியமான உளவியல் பின்னணி அந்தச் சமூகத்தின் மூலமே உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றது. பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் அல்லது அயலவர்கள் அடங்கலாக சகலரும் அதில் உட்படுவர். நடத்தையியலாளர்கள் (Behaviourists) குறிப்பிடுவது போல, சில நபர்கள் பிறப்பிலேயே வன்செயலுக்குச் சார்பான ஒரு போக்குடையவர்களாகத் தென்படுகின்ற போதிலும், அவர்களை வன்செயலின் பாத்திரமாக மாற்றுவதற்கு அவசியமான காரணிகள் அனைத்தும் மேற்சொன்ன சமூகச் சூழலினாலேயே உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றது. உலகப் பிரசித்திபெற்ற கொடூர குற்றச்செயலிநர்களின் கடந்த கால வாழ்க்கையை எடுத்து நோக்கும்போது அந்த விடயம் நமக்குத் தெளிவாகின்றது. இவ்வாறு ஒரு மனிதரை குற்றச்செயலிநராக அன்றேல் வன்செயலின் பாத்திரமாக மாறுவதில் தூண்டுதலளிக்கும் காரணிகள் குறித்து சற்று ஆராய்வது மிகவும் முக்கியமானதாகும்.

## குற்றச்செயலிநர் உருவாவதற்கான காரணங்கள்

### 1. சிறு பராயத்தில் பெற்றோரின் அன்பு கிட்டாமை

ஒரு மனிதனின் முழு ஆளுமை விருத்திக்காக சிறு பராயத்தில் தாயினதும் தந்தையினதும் அன்பும் பராமரிப்பும் கிட்டுவது கட்டாயமாகவே அவசியமாகின்றது. சிறு பராயத்தில் பெற்றோரின் அன்பை இழப்பது அவனது உள விருத்தியின் மீதும், தனிப்பட்ட விருத்தியின் மீதும் தெளிவாகவே தாக்கஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும். சிலவேளைகளில் அந்த நபரில் வன்செயல் (Violence)* போன்ற நடத்தை சார்ந்த பண்புகளை ஏற்படுத்துவதன் மீதும் அத்தகைய ஒரு நிலை பங்களிப்பாற்றுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால் பெற்றோரின் அன்பு இழக்கப்படலாம்.

- **குடும்ப அலகு அதிர்வுறுதல்:** விவாகரத்துச் செய்தல் போன்ற காரணங்களால் பெற்றோர் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும்போது பிள்ளைகள் தாய் அல்லது தந்தையின் தனிப் பொறுப்பில் அன்றேல் வேறு உறவினர்களின் பொறுப்பில் விடப்படுகின்றனர். பிள்ளைகளுக்கு பெருமளவுக்கு உரிய அன்பும், பாதுகாப்பும் இத்தகைய பிள்ளைகளுக்குக் கிடைக்காமல் செல்கிறது. வெளியாரின் பொறுப்பில் இருக்கும்போது அவர்களுக்கு சிலவேளைகளில் பல்வேறு இம்சைகளையும், துன்புறுத்தல்களையும் சந்திக்க நேரிடுகிறது. சிறிய தாய் அல்லது சிறிய தந்தை போன்ற புதிய பாத்திரங்களுக்கு எதிரில் தெளிவாகவே இவற்றை அவதானிக்க முடிகிறது. இத்தகைய சிறுவர்கள் வீட்டுவேலைகள் அன்றேல் சிறுவர் உழைப்பில் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிகிறது. பாதுகாப்பற்ற சூழலில் வாழும் அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களையும் பெருமளவுக்கு அவதானிக்க முடிகிறது.

- **போர்ச் சூழல் காரணமாக தந்தையை அல்லது தாயை இழத்தல்:** இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கவனத்திற்கொள்ளும்போது இந்த விடயம் விசேட முக்கியத்துவம் பெறுகிறது. பல தசாப்த காலமாகத் தொடரும் உள்நாட்டுப் போர் (Civil war) காரணமாக ஏராளமான பிள்ளைகள் தமது தந்தையரை இழந்துள்ளனர். போருடன் நேரடியாகவே தொடர்புபட்ட தரப்பினருக்குப் புறம்பாக போர் மோதல்களில் சிக்கிய அன்றேல் குண்டுவெடிப்புக்கள் போன்ற பயங்கரவாத செயல்கள் காரணமாகவும் பாரிய எண்ணிக்கையானோர் மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாக பிள்ளைகள் தமது தாய், தந்தை அன்றேல் அவர்கள் இருவரையும் இழந்த பல்வேறு சந்தர்ப்பங்களையும் பெரிதும் அவதானிக்க முடிகின்றது. அவர்களுள் சில பிள்ளைகள் வேறு உறவினர்களின் பாதுகாவலில் அன்றேல் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அத்தகைய பிள்ளைகள் சிலவேளைகளில் வீட்டுவேலைகள் போன்றவற்றில் ஈடுபடுத்துவதற்காக விலைக்கு விற்கப்பட்ட சந்தர்ப்பங்களும், ஆயுதக் குழுக்களால் கடத்திச் செல்லப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய துன்பந்தரும் ஒரு நிலைமையின் கீழ் வளரும் ஒரு பிள்ளை வன்செயலுக்குச் சார்பான ஒருவனாகவன்றி, அமைதியான ஒரு பிரசையாக உருவாவதற்கான வாய்ப்புக்கள் மிகச் சொற்பமானவையாகும்.

- **தாய் வெளிநாடு செல்லல்:** இலங்கைப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவதற்காகச் செல்வது, கடந்த காலத்தில் ஏற்பட்ட மற்றுமொரு போக்காகும். வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் சில பெண்கள் பிள்ளைகளைப் பெற்றெடுத்த, திருமணமான குடும்பப் பெண்களாவர். இங்கு, தாயின் பராமரிப்பை இழந்த அந்தப் பிள்ளைகள் தந்தையின் அல்லது வேறு உறவினர்களின் பாதுகாவலில் இருக்கின்றனர். அவ்வாறான ஒரு நிலைமை இந்த நாட்டில் சமூகப் பிரச்சினைகள் பலவற்றுக்கும் காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக, அத்தகைய தந்தையர் மதுபோதைக்குப் பழக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அது மேலும் பாரதூரமான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. தாயின் பராமரிப்பு மிகவும் வேண்டப்படும் ஒரு கட்டத்தில் தாய் வெளிநாடு செல்வதால் அந்தப் பிள்ளைகளுக்கு உரிய வழிகாட்டலின்றி அவர்களின் கல்விநிலை பாழ்படுவதும், பல்வேறு துர்நடத்தை சார்ந்த செயல்களின்பால் தூண்டப்படுவதும் காரணமாக இறுதியில் பல்வேறு வன்செயல்களின்பால் (Violence) அவர்கள் ஈர்க்கப்படுவது சர்வ சாதாரணமான ஒரு நிகழ்வாக மாறியுள்ளது. ஆகையால், வெளிநாடு செல்லும் பெண்கள் காரணமாக நாட்டுக்கு அந்நியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலாவணி உள்வருதல், நாட்டின் எதிர்கால சந்ததியினர் இடருக்கு உள்ளாதல் ஆகிய இரு துறைகள் குறித்தும் உரிய மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கான காலம் தோன்றியுள்ளது.

**2. ஆன்மிகத்தை ஊட்டிவளர்க்கும் நோக்கில் கல்வியைப் புறந்தள்ளுதல்**

- ***பாடத்தை மையமாகக்கொண்ட கல்வியில் ஆன்மிக மேம்பாட்டின்*** (Spiritual Upliftment) ***மீது கவனம் செலுத்தப்படாமை:*** கல்வி என்ற பதத்தின் பொருள் ஒரு மனிதனை ஆன்மிக ரீதியாக முன்னேற்றுதல் என்பதாகும். அன்றேல், சிறந்த ஒரு மனிதனை உருவாக்குதல் என்பதாகும். எனினும், இன்றைய கல்வி முறையில் பாடத்துடன் ஒன்றிய அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கே முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது. எனினும், ஒரு முழு மனிதனை உருவாக்குவதாயின் இந்த இரு துறைகளும் சார்ந்த அறிவும் கல்வியின் ஊடாகப் பொற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிஞர்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர் இன்று உணரத் தலைப்பட்டுள்ளனர். உலகம் பூராவும் பெரும்பாலான நாடுகளும் இன்று அது தொடர்பாக சிந்திக்க முற்பட்டுள்ளன. நவீன தொழினுட்பம் போன்றவற்றினால் ஒருவன் எவ்வளவுதான் உயர் அறிவைப் பெற்றுக்கொண்ட போதிலும் மேற்போந்த துறை தொடர்பான புரிந்துணர்வு அவனிடம் காணப்படவில்லை எனில் அந்த அறிவை அவனுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் கையாள முடியாமல் செல்லும். ஒரே நொடியில் பல நூற்றுக்கணக்கான மனிதர்களைத் துவம்சம் செய்ய வல்ல பயங்கர ஆயுதங்கள் அத்தகைய மனிதர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. கலையும் இலக்கியமும் மனிதனின் நுண்ணிய இரசனை உணர்வுகளை வளர்க்கும் ஒரு பாடமாகும். இலங்கையின் நிலையை எடுத்து நோக்கின், கடந்த காலங்களில் அந்தப் பாடத்துறைகள் கல்வியை விட்டும் தூரமாக்கப்பட்டிருந்தன. சிறு பராயம் தொடக்கம் இலக்கியத்தின்பால் ஈடுபாடுகொள்வதன் மூலம் ஒரு மனிதனின் இரசனை ஆற்றல்கள் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகின்றன. வாழ்வு குறித்த ஆழமான புரிந்துணர்வும் அதன் மூலம் கிடைக்கின்றது. அண்மைக் காலத்தில் எமது சமூகத்தில் அதிகரித்துள்ள வன்செயல்கள் பற்றி கருத்திற்கொள்ளும்போது மக்களிடையே சிறந்த இரசனை ஆற்றலும், வாழ்வு பற்றிய பரந்துபட்ட அறிவும் இன்மை அதற்கான காரணமாக அமையலாம் என எண்ணத் தோன்றுகின்றது. வன்செயல் சார்ந்த நடத்தைகள் மிகுந்த சமூகப் படிநிலைகளைக் கருத்திற்கொள்ளும்போது அவர்களின்ய இரசனை ஆற்றல் மிகத் தாழ்ந்த மட்டத்தில் உள்ளமை நன்கு புலப்படும் ஓர் அம்சமாகும். ஆகையால், கல்விக் கொள்கை வகுப்பாளர்களின் கவனம் இது தொடர்பிலும் ஈர்க்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

- **சமய நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் இடையிலான தொடர்பு விரிசலடைதல்:** ஆதியில் சமய நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் இடையில் மிக நெருங்கிய ஒரு தொடர்பு நிலவியது. இலங்கையில் நிலவிய கிராமத்திற்கும் பௌத்த கோயிலுக்கும் இடையிலான தொடர்பு இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். இங்கு, தனிநபர்கள் தமது வாழ்வை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டிய விதம் குறித்த ஆலோசனைகள் இலங்கை மக்கட் சமூகத்தில் முக்கிய பாத்திரம் வகித்த பௌத்த கோயிலின் நாயக்க தேரரினால் வழங்கப்பட்டன. மக்களுக்கு அவசியமான உள ரீதியான ஆலோசனைச் சேவையும் அவராலேயே வழங்கப்பட்டது. ஆகையால், அவர்கள் வன்செயலை நோக்கி அன்றேல் துர்ப்பழக்கங்களை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. பிள்ளைகளுக்குத் தேவையான அறநெறிக் கல்வி பௌத்த கோயிலிலிருந்து கிடைத்தது. அதன் மூலம் அவர்களின் வாழ்வைச் சிறு பராயம் முதலே அறநெறிப்படி ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான அடிப்படையொன்று வகுக்கப்பட்டிருந்தது. இதற்குப் புறம்பாக, மக்களின் கலை, இலக்கிய ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அதன் மூலம் ஆற்றப்பட்ட சேவையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அதன் மீதமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம், பெர"ரா ஊர்வலம், கலாசார வைபவங்கள் முதலியன அவற்றில் முக்கிய இடம் வகிக்கின்றன.

பிற்காலத்தில் மக்கள் வாழ்வு மிகவும் சிக்கலார்ந்ததாக மாறியதுடன் அந்தத் தொடர்பில் விரிசல் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இன்று உள ரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு நிறுவனங்களை நாட முற்பட்டதுடனும், சமய நிறுவனங்கள் வர்த்தகம் சார்ந்த பணிகளின்பால் சார்ந்ததுடனும் அந்த விரிசல் மேலும் அதிகரித்துள்ளது. குற்றச்செயல்களில் ஈடுபட்ட மனிதர்களின் வாழ்வைக் கூர்ந்துநோக்கின் அவர்கள் பெருமளவுக்கு அத்தகைய பின்னணியுடைய மனிதர்கள் அல்லர் என்பதாகவே தோன்றுகின்றது.

**3. சமூக ஏற்றத்தாழ்வுகளின் அழுத்தத்திற்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாதல்**

மனித சமூகத்தில் வளங்களின் பகிர்வு எப்பொழுதும் நியாயமானதாக அமைவதில்லை. அங்கு சில குழுக்கள் வறுமையின் அழுத்தத்திற்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளது. மறுபக்கம், சமூகத்தில் இனம், சாதி அடிப்படையிலும் பல்வேறு பிரிவினைகள் வேரூன்றி இருப்பதை அவதானிக்க முடிகிறது. இங்கு, சில மக்கட் குழுக்கள் அத்தகைய பிரிவினைகளின் விளைவாக அழுத்தத்திற்கு, நெருக்குதலுக்கு அல்லது அநீதிக்கு உள்ளாகும் வாய்ப்புள்ளது. அவ்வாறே, சட்டம் உரிய விதத்தில் செயற்படுத்தப்படாமையும் மக்கள் அநீதிக்கு உள்ளாவதற்கான மற்றுமொரு சந்தர்ப்பமாகும். இவ்வாறாக, நாம் மேலே குறிப்பிட்ட வறுமைநிலை, இன ரீதியான அல்லது சாதி அடிப்படையிலான நெருக்குதல்கள், அழுத்தங்கள், சட்டத்தை அமுல்படுத்தும்போது அநீதி இழைக்கப்படல், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் முதலிய பல்வேறு காரணங்களால் அதன் மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் தரப்பினருக்கு முழுதும் அளாவிய சமூகத்தின் மீதும் குரோதவுணர்வொன்று அன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்ப்புணர்வொன்று ஏற்படலாம். அது பெருமளவுக்கு வன்செயலாக வெடிக்கும் சந்தர்ப்பங்களையும் நம்மால் பரவலாகக் காண முடிகிறது. இது தொடர்பாக சற்று விரிவாக நோக்குவது இங்கு முக்கியமானதாக அமையும்:-

- **ஏழ்மை:** வறுமைநிலையால் வாடும் மக்கட் குழுக்களுள் வன்செயல் உருவாவதற்கான போக்கு அதிகமாகவே உள்ளது. குறிப்பாக, நகர்ப்புற சேரிவாசிகளிடையே இந்த நிலையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. பல்வேறு காரணங்களால் வறுமைநிலை ஏற்படலாம். எனினும், அது எத்தகைய நிலைமையின் கீழாயினும் தமது நாளாந்த வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்குப் போதியளவு வருவாய் இன்றியபோது வாழ்வு குறித்த ஆழமான புரிந்துணர்வின்றிய மனிதர்கள் எளிதில் பணம் ஈட்டக்கூடியதும், சட்டவிரோதமானதும், வன்செயல் சார்ந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அவ்வாறே, சமூக விரோத சக்திகள் தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக அத்தகைய ஆட்களை மிக எளிதாக பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். உலகம் முழுவதும் பயங்கரவார, சமூக விரோத சக்திகளுக்கு அதிக ஒத்துழைப்பு நல்குவோர் வறிய மக்கட் குழுக்களாக இருப்பதிலிருந்து இதனைத் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது. இந்த நிலையை வறிய ஆபிரிக்க நாடுகளில் சிறப்பாக அவதானிக்கலாம். ஆகையால், சமூகத்திலிருந்து வன்செயலை இல்லாதொழிப்பதற்கான திட்டங்களை வகுக்கும்போது இந்தப் பிரிவினர் பற்றியும் விசேட கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

- **இன ரீதியான அல்லது சாதி அடிப்படையிலான நெருக்கடிகள்:** இனம், சாதி அடிப்படையிலான பல்வேறு பிரிவினைகள் சமூகத்தின் மத்தியில் நிலவுகின்றன. அத்தகைய நிலைமைகளின் கீழ் சிலவேளைகளில் ஒரு தரப்பினர் அல்லது பல தரப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நன்மைகளைத் துய்ப்பதற்கான வாய்ப்பு இருப்பதுடன், மற்றைய பிரிவினர் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு உள்ளாக நேரிடும். இலங்கையில் இந்த நிலை பெருமளவுக்கு உணரப்படவில்லை. எனினும், இன ரீதியான, சாதி அடிப்படையிலான பிரிவினைகள் பெரிதும் சமூகத்தை ஆட்டிப் படைக்கும் இந்தியா போன்ற நாடுகளின் மக்கட் சமூகத்தில் அதனைத் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது. பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் பொதுவாக ஆட்சிக்கு அதிக பங்களிப்பு ஆற்றுவோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர்களாவர். அத்தகைய ஒரு நிலைமையில் அவர்களால் அமுல்படுத்தப்படும் கொள்கைகள் மீது சிறுபான்மை இனக் குழுக்கள் விசேடமாக கூருணர்வுடன் இருப்பர். உதாரணமாக, "70 தசாப்தத்தின் ஈற்றரைப் பாகத்தில் இலங்கையில் அறிமுகம்செய்து வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தும்போது அதன் மூலம் முழுதும் அளாவிய சமூகத்தில் வாழும் சகல சமூகப் படிநிலைகளினதும் குறிப்பாக, சிறுபான்மை இனங்களின் பதிற்குறிகாட்டி காரணமாக உள்ளூர் உற்பத்திகள் கடும் போட்டியை எதிர்கொள்ள நேரிட்டது. இந்த நிலைமை பொதுவாக இலங்கையின் எல்லாப் பிரதேசங்களிலும் விவசாயப் பயிர் உள்ளிட்ட உற்பத்திகளில் ஈடுபட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தின் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்திற்று. எனினும், வடபுல மக்கள் இனவாத உணர்வுடன் தமக்கெதிராக மாத்திரம் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு கொள்கையாகவே அதனை நோக்கினர். அத்தகைய ஒரு மனப்பாங்கு பிற்காலத்தில் பிரிவினைவாத உணர்வை ஊட்டி வளர்ப்பதற்கும் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு நல்கியது. ஆகையால், ஓர் அரசாங்கம் கொள்கைகளைச் செயற்படுத்தும்போது அதன் மூலம் சமூகத்தில் வாழும் சகல சமூகப் படிநிலைகளும் குறிப்பாக, சிறுபான்மை இனங்கள் அவற்றுக்கு பதிற்குறி காட்டும் விதம் குறித்த கூருணர்வுடன் செயற்படுவது முக்கியமானதாகும். அன்றேல், அத்தகைய கொள்கைகள் காரணமாக அழுத்தங்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளுக்கும் உள்ளாகும் தரப்பினர் அவற்றின் மீது வன்செயல் சார்ந்த பதிற்குறியைக் காண்பிப்பதன்பால் தூண்டப்படலாம். அத்தகைய ஒரு நிலைமை ஏற்படுமாயின், முழுதும் அளாவிய நாட்டின் முன்னேற்றத்தின் மீதும் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். உலகம் பூராவும் நிலவும் போர் முறுகல்நிலைகளை உற்றுநோக்கும்போது அவற்றில் பெரும்பாலானவற்றுக்கு இன ரீதியான அடிப்படையொன்று காணப்படுகின்றது. அதற்கான முக்கிய காரணம், ஆட்சியாளர்கள் பெருமளவுக்கு மேற்போந்த நிலைமைகளைப் புரிந்துகொள்ளாத நிலையில் இருப்பதாகும்.

- **சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாதல்:** சிறு பராயத்தில் துஷ்பிரயோகம் அன்றேல் வயதுவந்தோரின் நீண்டகால துன்புறுத்தலுக்கு உள்ளாவதன் காரணமாக குறித்த நபரின் மனதில் சமூகத்தின் மீதான குரோத உணர்வொன்று தோன்றும். அத்தகைய ஒரு நிலைமைக்கு உள்ளாவோருக்கு ஏனையோரின் அன்பையும் பாசத்தையும் பெறுவதற்கு அவசியமாக இருக்கும். அத்துடன், அத்தகையவர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சை (Psycho Therapy) பெற்றுக்கொடுப்பது அவசியமாகும். அன்றேல், உள ரீதியான பாதிப்புகளுடன் அன்றேல் நாசகார மனிதப் பாத்திரங்களாகவே அத்தகைய ஆட்கள் வயது மூப்படைவர். துஷ்பிரயோகத்திற்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாவதற்கான அதிக ஆபத்துடன்கூடிய தெருவோரச் சிறார்களும் நகர்ப்புற சேரிவாசிகளின் பிள்ளைகளும் பிற்காலத்தில் பெருமளவுக்கு பாதாள உலக (Under world) நாசகாரிகள் போன்ற கர்ணகொடூர மனிதர்களாக மாறுகின்றனர் என்பது யாவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

- **சட்டம் உரிய முறையில் நீதியாக அமுல்படுத்தப்படாமை:** "சட்டத்தின் முன் யாவரும் சமமானவர்கள்" என்பது அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை அமுல்படுத்தும்போது அது அவ்வாறே இடம்பெறுவதில்லை என்பதை இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளிலும் குறிப்பாக, வளர்முக நாடுகளில் தெளிவாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. சிலவேளைகளில் பலம்பொருந்திய, வல்லமைமிக்க தரப்பினர் மீது பெரிதும் சார்பானதாக சட்டம் அமுல்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய நிலைமைகளின் கீழ் சட்டத்தையும் நியாயத்தையும் அமுல்படுத்தும் பணியின் மீது அநீதிக்கு உள்ளாகும் தரப்பினருக்கு விரக்தியுணர்வு தோன்ற வாய்ப்புள்ளது. அவர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட சட்டகத்திற்குப் புறம்பான செயன்முறைகளை நாடுவதற்கான தூண்டுதலை அங்கு காணலாம்.

சட்டத்தை அமுல்படுத்துவதில் பொலிசு (Police) பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனமாகும். தமக்கு அநீதியொன்று இழைக்கப்பட்டிருக்கும் வேளையில் பொலிசு நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் பொலிசு அலுவலர்கள் நீதியாகவும் நியாயமாகவும் செயலாற்ற வேண்டுமென்பது ஒவ்வொரு பிரசையினதும் எதிர்பார்ப்பாகும். பெருமளவுக்கு அது அவ்வாறே இடம்பெறாதபோதிலும் சில அலுவலர்கள் அந்தப் பணியில் பக்கச்சார்பாக நடந்துகொள்ளும் சந்தர்ப்பங்களைக் காண முடிகிறது. அவ்வாறே, குற்றம்சாட்டப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் கரிசனை கொள்ளாத, குறித்த பணியைத் தேவையின்றி தாமதப்படுத்தும் சந்தர்ப்பங்களும் உள்ளன. சிலவேளைகளில், அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் முறைப்பாட்டுக்காரர்கள் பெரிதும் நிர்க்கதிக்கு உள்ளாவதுடன், அது அவர்களை தொடர்புபட்டவர்கள் மேலும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவதற்கும் காரணமாக அமையலாம். அத்தகைய ஒரு நிலைமை, நீதியான ஒரு சமூகத்தின் இருப்பின் மீது பெரிதும் பாதக தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். ஒருபக்கம், அது அத்தகைய செயல்களில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்காக குற்றமிழைத்தவர்களுக்குக் கிட்டும் பக்கபலமாகவும் கருதப்படலாம். மறுபக்கம், நெருக்கடிக்கு உள்ளான தரப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மீது இழைக்கப்பட்ட அநீதியைத் திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப் படாமையுமாகும்.

எனினும், இந்தப் பிரச்சினையின் மற்றுமொரு பக்கமும் உள்ளது. அதாவது, இலங்கையின் நிலைமையைக் கருத்திற்கொள்ளும்போது பொலிசு அலுவலர்கள் மிகவும் வரையறுக்கப்பட்ட வளங்களுடனேயே செயலாற்ற நேரிட்டுள்ளது. சந்தேக நபர்களை (Suspects) விரைவாகக் கைதுசெய்வதற்கு (Arrest) அவசியமான வாகன வசதி அவர்கள் வசம் மிகக் குறைவாகவே உள்ளது. அவ்வாறே, இலங்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அவசியமான நவீன தொழினுட்ப உபகரணங்களும் பொலிசு நிலையங்களில் இல்லை. அவ்வாறே, சில தவறாளிகளை (Offenders) கைதுசெய்த பின்னர் அவர்களை விடுவித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான அரசியல் தலையீடுகளும் (Political Interfere), முனைப்புகளும் பொலிசு அலுவலர்கள் முகங்கொடுக்கும் மற்றுமொரு பிரச்சினையாகும். நீண்டகால சிவில் போர் நிலைவரத்தின் மத்தியில் உள்ள ஒரு நாடு என்ற வகையில் போர்ப் பயிற்சி பெற்ற பாரிய எண்ணிக்கையானோர் இந்த நாட்டில் உள்ளனர். குறிப்பாக, ஆயுதந்தாங்கிய படையணிகளிலிருந்து தப்பிச்சென்ற ஆட்கள் பல்வேறு விதமான குற்றச் செயல்களுடனும் தொடர்புபட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அத்தகைய ஆட்களைக் கைதுசெய்வதற்கு அவசியமான பயிற்சி, இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான பொலிசு அலுவலர்களுக்குக் கிடையாது. இத்தகைய ஒரு நிலைமையின் கீழ் அத்தகைய பொலிசு அலுவலர்கள் தமது உயிரையும் பணயம் வைக்கவேண்டி நேரிடும் சந்தர்ப்பங்களை அண்மைக்காலத்தில் நாம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆகையால், குற்றச்செயல்களை முறியடிப்பதற்காக சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதை முறைவலுப்படுத்தும் முயற்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாகவே பொலிசுத் திணைக்களத்திலுள்ள செயலற்ற தன்மைக்கான காரணிகள் குறித்து கவனம் செலுத்துவதும் மிகவும் முக்கியமானதாகும்.

**4. குற்றச்செயல்களுக்குச் சார்பான ஆட்களுடன் ஏற்படும் நட்பு:**

- ***சிறையிடப்பட்ட சிறு தவறாளிகள், குற்றச்செயலிநர்களாக மாறுதல்:*** குற்றச்செயல்கள் சார்பான ஆட்களுடன் பழகுவதன் காரணமாக ஏனையோர் குற்றச்செயலிநர்களாக மாறும் ஒரு சந்தர்ப்பத்திற்குச் சிறந்த உதாரணம் சிறையிடப்பட்டவர்களிலிருந்தே எமக்குக் கிடைக்கின்றது. சிறு தவறுகளுக்காக சிறையிடப்பட்ட ஆட்கள் அங்கு கொடூர குற்றச்செயல்களைப் புரிந்தமைக்காக தண்டனைகளை அனுபவித்து வருபவர்களுடன் நட்புக் கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டுகின்றது. சிறையினுள் உருவாகும் இந்த நட்பின் ஊடாக பாரதூரமான குற்றச்செயல்களை மேற்கொள்ளும் விதம், அவற்றின் ஊடாக பணம் ஈட்டும் விதம் தொடர்பாகக் கற்றுக்கொள்ள புதியவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டுகின்றது. இதனால், சிறையிலிருந்து விடுதலையாகி வந்த பின்னரும் பொருளாதார வசதியீனங்களைத் தவிர்ப்பதற்காக அத்தகைய பழக்கத்தின்பால் அவர்கள் தூண்டப்படுகின்றனர்.

- **குற்றச்செயல்களுக்குச் சார்பான உறவினர்கள் அல்லது அன்பர்களுடன் பழகுதல்:** பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட அனுபவங்கள் கொண்ட எனினும், சட்டத்தின் முன் குற்றவாளிகளாக நிறுத்தப்படாத ஆட்கள் சமூகத்தில் அநேகம் பேர் உள்ளனர். அத்தகைய ஆட்கள் பெரும்பாலும் பணம் ஈட்டுவதற்கான வழிகளாக அல்லது வேறு நோக்குடன் தொடர்ச்சியாகவே குற்றச்செயல்களில் ஈடுபாடு கொள்கின்றனர். அத்தகைய ஆட்களுடன் பழகுவோர் சிலவேளைகளில் தாமாகவே குற்றச்செயல்களின் பங்காளர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அவர்கள் வசம் அதிகளவில் பணம் இருப்பதன் காரணமாக ஏனையோரையும் நுட்பமான முறையில் கவர்ந்து இழுப்பதற்கான முறையை குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் நன்கறிவர். குறிப்பாக, போதைப்பொருள் வியாபாரத்துடன் (Drug Business) தொடர்புபட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் இளைஞர்களை தம் பக்கம் கவர்ந்திழுப்பதற்காக முதலில் சிகரட், மதுபானம் போன்றவற்றை இலவசமாகவே வழங்குவர். பின்பு, படிப்படியாக அவர்கள் ஹெரோயின் போன்ற போதையூட்டிகளைப் பாவிக்கத் தூண்டப்படுகின்றனர். அவற்றுக்கு அடிமையான பின் அந்த இளைஞர்கள் போதைப்பொருள் கடத்தல் (Drug Smuggling) முதலிய குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

## 5. குற்றச்செயல்கள் சமூகமயமாதல்

யாதேனும் ஒரு தவறு நீண்ட காலமாக சமூகத்தில் வேரூன்றிய பின்னர், அதனைத் தவறாகக் காண்பதற்குப் பதிலாக படிப்படியாக அதனைச் சர்வ சாதாரணமான ஒன்றாக நினைப்பதற்கு மனிதர்கள் தூண்டப்படுகின்றனர். அத்தகைய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு சமூகத்தை அத்தகைய நிலைமையிலிருந்து மீட்டெடுப்பது மிகக் கடினமாகும். குறிப்பாக, கல்வி மட்டம் குறைந்த, வாழ்க்கைக் குறிகாட்டியினால் ஊட்டம் பெறாத சமூகப் படிநிலைகளில் இதனை மிகத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. சட்டம் உரிய விதத்தில் அமுல்படுத்தப்படாத ஒரு பின்னணியில் இதனை மிகச் சிறப்பாக அவதானிக்கலாம். பாலியல் துன்புறுத்தல், இலஞ்சம் வழங்குதல், இலஞ்சம் பெறுதல், பொதுச் சொத்துக்களைக் கையாடல் போன்ற விடயங்கள் தொடர்பில் இது விசேடமாக ஏற்புடைத்தாகும். இத்தகைய நிலைமையிலிருந்து சமூகத்தை மீட்டெடுப்பதற்காக பாடசாலைசெல்லும் பராயம் முதலே அது தொடர்பான விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்துவது அவசியமானதாக உள்ளது. அத்துடன், தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனமொன்றையும் அதற்காகப் பயன்படுத்திக்கொள்வது முக்கியமானதாகும். அன்றேல், அந்தச் சூழ்நிலையினாலேயே சட்டத்தை மதிக்காத, குற்றச் செயல்களுக்குச் சார்பான மனிதர்கள் மென்மேலும் உருவாக்கப்படுவர்.

**6. குற்றச்செயல்களும் அவற்றை மேற்கொள்ளும் விதமும் பற்றி ஊடகங்கள் வாயிலாக அறிவூட்டப்படல்:**

- **குற்றச்செயல்கள் சார்ந்த காட்சிகள் அடங்கிய திரைப்படங்களும் தொலைக்காட்சித் தொடர்களும்:** தற்காலத்தில் தயாரிக்கப்படும் பெரும்பாலான திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட சமூக விரோத செயல்கள் பற்றிய காட்சிகள் உள்ளடக்கப்படுகின்றன. குறிப்பாக, ஆயுதங்களைப் பயன்படுத்தி மனிதர்களைக் கொன்று குவிக்கும் காட்சிகள் அவற்றில் பெரிதும் உள்ளடக்கப்படுகின்றன. சிலவேளைகளில், இவற்றினால் நேரடியாகவே முன்மாதிரியொன்றை பெற்று குற்றச்செயல்களை மேற்கொண்ட பல்வேறு சம்பவங்கள் குறித்தும் கடந்த காலத்தில் நம்மால் அறிய முடிந்தது. அதற்கு மேலதிகமாக, பெருமளவுக்கு சிறு பிள்ளைகள் அவற்றில் வரும் பாத்திரங்களை தமது நிஜ வாழ்வின் வீரதீரமிகு, முன்மாதிரியான பாத்திரங்களாக நினைக்கத் தூண்டப்படுவதும் அதன் மூலம் ஏற்படும் படுமோசமான ஒரு விளைவாகும். கொலைகள் போன்ற துன்புறுத்தும் செயல்களை அடிக்கடி பார்த்து இரசிப்பதன் காரணமாக அவற்றைப் பார்ப்பவர்களுள் அத்தகைய செயல்கள் மீது உள்ளத்தில் உருவாகும் கூருணர்வு குன்றும். அவ்வாறே, அடி மனதில் அவை ஆழப் பதிவதால் தீர்க்ககரமான சந்தர்ப்பங்களில் அத்தகைய காட்சிகளைப் பார்ப்போருள்ளும் அத்தகைய பயங்கரமான விளைவுகள் பிரதிபலிப்பதற்கான உள ரீதியான ஒரு தூண்டுதல் அதன் மூலம் உருவாகும். கூருணர்வுமிகு வயதிலுள்ள சிறுவர்கள் தொடர்பில் இது மிகவும் பாதகமான ஒரு நிலைமையாகும். அவர்களுள் கொடூர தன்மையும் வன்செயலும் வளர்வதற்கும் அது காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. இத்தகைய நிலையைப் புரிந்துகொண்டுள்ள சில நாடுகள் அத்தகைய காட்சிகள் அடங்கிய திரைப்படங்களையும் தொலைக்காட்சித் தொடர்களையும் சிறுவர்களுக்கு காண்பிப்பதை ஓரளவுக்கு மட்டுப்படுத்தியுள்ளன.

- **துன்புறுத்தும் செயல்கள் அடங்கிய கணினி விளையாட்டுக்கள்:** அண்மைக்காலத்தில் தொடர்பாடல் தொழினுட்பத்துறையில் (Communication Technology) ஏற்பட்ட பெரு முன்னேற்றத்துடன் கணினி விளையாட்டுக்களும் (Computer Games) பெரிதும் பிரபல்யம் அடைந்துள்ளன. பெருமளவுக்கு சுடுபடைக்கலன்கள்/துப்பாக்கிகள், வெடிக்கும் போர்க்கருவிகள் (Firearms) மூலம் எதிரிகளைக் கொன்றுகுவிப்பது போன்ற துன்புறுத்தும் செயல்கள் பெருவாரியாக இத்தகைய விளையாட்டுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாடசாலை செல்லும் பராயத்திலுள்ள சிறுவர்கள் இத்தகைய விளையாட்டுக்களின்பால் பெரிதும் ஈர்க்கப்படும் போக்கை இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளில் தெளிவாக அவதானிக்க முடிகிறது. அவற்றைக் கைவிட முடியாதளவு அவற்றுக்கு அடிமையானோருள் வன்செயல் சார்புப் போக்கு, மனநிலை பாதிப்பு போன்றன ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா உட்பட பெரும்பாலான நாடுகளில் பாடசாலை மாணாக்கரிடையே நடாத்தப்பட்ட அளவாய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கடந்த காலத்தில் அமெரிக்காவில் ஒரு பாடசாலை மாணவன் தனது சக மாணாக்கரை சுட்டுக்கொன்ற பின்னர் அவனது தனிப்பட்ட தகவல்கள் தொடர்பாக தேடியபோது அவன் துன்புறுத்தல் காட்சிகள் அடங்கிய கணினி விளையாட்டுக்களில் பெருமளவுக்கு ஈடுபாடு கொண்டவனாக இருந்ததாக அறியக் கிடைத்துள்ளது. நவீன தொழினுட்பத்துடன் தோன்றும் இத்தகைய போக்குகளில் வரையறைகளை விதித்தல் போன்ற தலையீடுகள் மீது ஓர் அரசாங்கத்திற்கு அல்லது வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளுக்குள்ள ஆற்றல் சொற்பமானதாகும். எனினும், பெற்றோர், ஆசிரியர்கள் போன்றோர் இது தொடர்பான பாதக விளைவுகள் குறித்து சிறுவர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

- **போர்க்கால துன்புறுத்தல்கள் அடங்கிய செய்தி நிகழ்ச்சிகள்:** இன்று உலகளாவிய அளவில் போர் முறுகல்நிலையும், பதட்டமும் பெரிதும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. பயங்கரவாதத் தாக்குதல்கள் (Terrorist Attacks), ஆயுதப் போராட்டங்கள் (Armed Conflicts), தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் (Suicide Bomb Attacks) முதலியவற்றினால் மரணிப்போரின் காட்சிகள் நாளாந்தம் தொலைக்காட்சி வாயிலாக காண்பிக்கப்படுகிறது. குறிப்பாக, ஈராக், பலஸ்தீன் உட்பட மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இடம்பெறும் மனிதப் படுகொலைகள் (Homicide) பற்றிய காட்சிகள் நாளாந்தம் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்பாகின்றன. இத்தகைய காட்சிகளை நாளாந்தம் காண்பதன் மூலம் மனத்துள் கூருணர்வு நலிவடைந்து, அவற்றைச் சர்வ சாதாரணமான நிகழ்வுகளாகக் கருதுமளவுக்கு மனிதர்கள் பழக்கப்படுகின்றனர். அவ்வாறே, அத்தகைய குற்றச்செயல்களைப் புரிவதற்கு மனித மனங்களில் குடிகொண்டுள்ள அச்சவுணர்வும் அதன் மூலம் நீங்கிவிடுகிறது. குறிப்பாக, சிறு பிள்ளைகள் அத்தகைய நிகழ்வுகளை தமது வாழ்வில் பரீட்சித்துப் பார்க்க முற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக, ஈராக் நாட்டின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்ட காட்சி உலகெங்கும் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்பானதை அடுத்து, பல்வேறு நாடுகளிலும் அதனைப் போல் செய்துபார்க்க முற்பட்ட பல சிறார்கள் பரிதாபகரமான முறையில் மரணத்தைத் தழுவிக் கொண்டதாக அண்மையில் அறிய கிடைத்துள்ளது. அத்தகைய காட்சிகள் மக்கள் வாழ்வு மீது எத்தகைய கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை இதிலிருந்து உணர முடிகின்றது. ஆகையால், அத்தகைய கூருணர்வுமிகு நிகழ்வுகளையும், மனிதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகொலைகள் குறித்த சம்பவங்களையும் அறிக்கையிடும்போது ஆராய்ந்துபார்த்து மிகவும் மதிநுட்பத்துடன் அவற்றை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

• **கொலைகள், பிற குற்றச்செயல்கள் பற்றி விபரிக்கும் தொடர் கதைகள்:** கொலைகள், தற்கொலை முயற்சிகள், பிற குற்றச்செயல்களைக் கருவாகக் கொண்டு எழுதப்படும் கற்பனைத் தொடர் கதைகள் பெரும்பாலும் செய்தித்தாள்களில் பிரசுரமாகின்றன. அத்தகைய கதைகள் சில வானொலி அலைவரிசைகளில் நாடக வடிவிலும் ஒலிபரப்பாகின்றன. இவ்வாறாக, கதை வடிவில் அல்லது நாடக வடிவில் முன்வைப்பதானது, செய்தி வடிவில் அதனை முன்வைப்பதை விட வாசகர்களுக்கும் நேயர்களுக்கும் மிகவும் நெருக்கமானதாக அமைந்து விடுகிறது. ஆகையால், அதன் மூலம் சமூகத்தின் மீது ஏற்படுத்தப்படும் தாக்கம் மிகவும் வலுவானது என்பது உளவியலாளர் (Psychologist) தெரிவிக்கும் கருத்து. வேறு வார்த்தையில் கூறுவதாயின், மக்கள் அபிப்பிராயத்தினுள் குற்றச்செயல்களின் கலாசாரத்தை வளர்ப்பதாகும்.

• **துர்நடத்தைகளை (Misconduct) வருமானமீட்டும் மார்க்கமாகக் கொண்ட சமூகப் படிநிலையொன்று தோற்றம்பெற்றுள்ளமை:** சட்டவிரோத அல்லது சமூக விரோத செயல்களின் மூலம் வருமானமீட்டும் ஒரு சாரார் இன்று நாட்டில் தோற்றம் பெற்றுள்ளனர். போதைப்பொருள் வியாபாரம், கள்ளச் சாராயம் வடித்தல், விலைமாதர் விடுதிகளை நடாத்துதல், சட்டவிரோத ஆயுத விற்பனை போன்றவற்றின் மூலம் பணம் ஈட்டுவோர் இந்த சமூகப் படிநிலையைச் சார்வர். ஆயுதப் பயிற்சி பெற்றுள்ள காடையர் கும்பல்களைக் கையாட்களாக வைத்திருப்பது இத்தகையவர்களின் பண்பாக உள்ளது. பாதாள உலகம் எனப்படும் திட்டமிட்ட, அமைப்பார்ந்த குற்றச்செயல்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்போனவர்கள் இத்தகைய சட்டவிரோத வியாபாரங்களினூடாகவே

உருவாகின்றனர். வர்த்தகர்களிடமிருந்து கப்பம் பெறல், கொள்ளையிடுதல் போன்ற அட்டூழியங்களைப் புரிவதும் அவர்களின் வருமானமீட்டல் மார்க்கமாக உள்ளது. சில அரசியல்வாதிகளினதும் ஒரு சில பொலிசு அலுவலர்களினதும் அனுசரணை கிடைப்பதன் காரணமாக இச்சாரார் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில்லை. இத்தகைய குழுக்களின் இருப்பு தெளிவாகவே சமூகத்தில் குற்றச்செயல்கள் அதிகரிக்கக் காரணமாக உள்ளது.

**திருடன் கூரை மேல் ஏறுவதற்கு ஏணியைப் பிடிப்பவனும் திருடனேயாவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் குற்றச்செயல்கள் தொடர்பான தற்போதைய நிலைமை

மேலே விபரிக்கப்பட்டவாறு, கடந்த பல தசாப்த காலத்துள் எமது நாட்டில் குற்றச்செயல்களின் எண்ணிக்கையும், அவற்றின் படுபயங்கர தன்மையும் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. நாட்டில் நிலவும் உள்நாட்டுப் போர், ஊடகங்கள் வாயிலாக இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பான அறிக்கையிடல் போன்றே, அத்தகைய ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் உளரீதியான வேறுபாடும் அத்தகைய குற்றச்செயல்களின் அதிகரிப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, பொருளாதார முறையினால் மனிதர்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டி மனப்பான்மையும் அதன் மீது பெரிதும் பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

**குற்றச்செயல்களின் அதிகரிப்பின் மீது போரின் தாக்கம்:** உள்நாட்டுப் போர் நிலவும் எந்தவொரு நாட்டிலும் குற்றச்செயல்கள் அதிகரிப்பது தெளிவாகவே அவதானிக்கக்கூடிய ஒரு நிலைமையாகும். போர்ச் சூழலில் பெரும் எண்ணிக்கையானோருக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கவேண்டி நேரிடுகிறது. போருடன் தொடர்புபட்ட ஆயுதந்தாங்கிய குழுக்கள் போன்றே, அரசாங்க பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்புபட்ட உத்தியோகபூர்வமாகப் பயிற்சிபெற்ற பிரிவினரும் அதனைச் சார்வர். பாதுகாப்புத் துறைகளில் பயிற்சிபெற்ற தரப்பினர் சிலவேளைகளில் அந்தச் சேவைகளிலிருந்து தப்பி ஓடிவிடுவதுமுண்டு. சட்டவிரோத ஆயுதந்தாங்கிய குழுக்களைச் சேர்ந்த ஆட்கள் போன்றே, அத்தகைய பாதுகாப்புப் பிரிவுகளிலிருந்து தப்பி ஓடுவோரும் பலதரப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட பல்வேறு சம்பவங்களும் பற்றி கடந்த காலத்தில் அறிய முடிந்தது. ஆயுதப் பயிற்சிபெற்றுள்ள காரணத்தினால் அத்தகைய செயல்களின்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இலகுவில் தூண்டப்படுகின்றனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள், ஒப்பந்த அடிப்படையிலான கொலைகள் முதலிய பல்வேறு சம்பவங்களுடன் அத்தகையோர் தொடர்புபட்டுள்ளமை பற்றி அறியக் கிடைத்துள்ளது. ஆகையால், மேற்போந்த தரப்பினர் தொடர்பில் கடுமையாகக் கவனம் செலுத்துவது குற்றச்செயல்களைத் தடுப்பதில் மிகவும் முக்கியமானதாகும். எந்தவொரு நாட்டிலும் போர் நிலைவரத்துடன் ஆயுதக் கையாளலும் துரிதமாக அதிகரிக்கும். குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களுக்கு சுடுபடைக்கலன்கள்/துப்பாக்கிகள், குண்டுகள் அடங்கலான ஆயுதங்களின் கிடைப்பனவுக்கான மார்க்கங்கள் அதனுடன் இலகுவாகத் திறந்துவிடப்படுவதே அதற்குரிய காரணமாகும். எண்ணிக்கையில் 30,000 க்கும் மேற்பட்ட சிறிய ரக ஆயுதங்கள் இலங்கையில் பரம்பியுள்ளதாக அளவாய்வுகள் கூறுகின்றன. இத்தகைய ஒரு நிலைமை அமைதியான மக்கள் வாழ்வின் நிலைபேற்றின் மீது பெருமளவுக்கு பாரதூரமான ஒரு நிலைமையாகும்.

**பிற குற்றச்செயல்கள்:**

- **பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்:** எமது நாட்டில் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் பொது இடங்களிலும், வேலைத்தலங்களிலும் அதேபோல வீடுகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. வீடுகளில் இடம்பெறும் தாக்குதல்கள் போன்ற உடலியல் துன்புறுத்தல்களுடன் கணவன், தந்தை, சகோரதரர்கள் போன்ற உறவினர்கள் தொடர்புபடுகின்றனர். அவர்கள் குடிபோதைக்கு அடிமையாயிருத்தலும், பொருளாதாரப் பிரச்சினைகளும் அதற்குக் காரணமாக அமைகின்றன. குறிப்பாக, கிராமப்புறங்களில் கடந்த காலத்தில் துரிதமாகப் பரவிய மதுப்பழக்கம் அதற்கு முக்கிய ஒரு காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, கிராமப்புறங்களின் வறுமைநிலையும், வீடுகளில் இடம்பெறும் துன்புறுத்தல்களும், வேறு தனிநபர்களுக்கு இடையிலான பிரச்சினைகளும் அதிகரிப்பதற்கு மதுபானத் தொல்லை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இதற்குப் புறம்பாக, போக்குவரவு உள்ளிட்ட பொது இடங்களிலும், வேலைத் தலங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக, வேலைத்தலங்களில் இந்த நிலையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. இத்தகைய செயல்களை துணிவுடன் எதிர்த்துநிற்கும் பெண்களின் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை தொழில்ரீதியாக இழக்கச்செய்தல், இடமாற்றம் வழங்கல், சொல் ரீதியான துன்புறுத்தல் போன்றவற்றுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களை அநேகமாகக் காணலாம். குறிப்பாக, தாபனத் தலைவர்கள் போன்றோர் அத்தகைய செயல்களுடன் தொடர்புபடும்போது இத்தகைய நிலைமைகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இலங்கையில் அரச துறையை விட தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்கள் இத்தகைய துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடுவதற்கான போக்கை பெருமளவுக்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவர்கள் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் சுயேட்சையாகச் செயலாற்றுவோராக இருப்பதால், தமது ஊழியர்கள் மீது அவர்கள் அதிக அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடியதாக இருப்பதும், அரச துறையில் போல் ஊழியர்கள் தமது தொழில் ரீதியான உரிமைகள் தொடர்பில் குரல் எழுப்பாமையும் அதற்குரிய காரணங்களாகும். பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பது பற்றிய ஐக்கிய நாடுகள் பட்டயத்தைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடு என்ற வகையில் எமது நாட்டில் வலுவிலுள்ள சட்டத்தின் கீழும் அது ஒரு பாரதூரமான குற்றமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்:** சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களில் சிறுவர் துஷ்பிரயோகம் (Child Abuse), சிறுவர் உழைப்பு (Child Labour) என்பன முக்கியமானவையாகும். துஷ்பிரயோகம் தொடர்பாகக் கருத்திற்கொள்ளும்போது, வெளியாட்கள் போன்றே, குடும்ப உறவினர்கள் தொடர்புபடும் சந்தர்ப்பங்கள் பற்றியும் அறியக் கிடைக்கின்றது. அத்தகைய சம்பவங்கள் குறித்து விபரிப்பதற்கு அவர்களுக்குப் போதிய அறிவு இல்லாமை காரணமாகவும், அத்தகைய செயல்களுடன் தொடர்புபட்ட ஆட்கள் மீதான அச்சம், வெட்கவுணர்வு ஆகியன காரணமாகவும் அத்தகைய சம்பவங்கள் குறித்து சிலவேளைகளில் வயதுவந்தோர் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிட்டாமல் செல்லலாம். எனினும், அத்தகைய பிள்ளைகளின் நடத்தைகள் தொடர்பாக கூர்ந்து அவதானித்தால் அது தொடர்பாக போதிய புரிந்துணர்வைப் பெறலாம். எவ்வாறாயினும், குடும்ப உறவினர்கள் அத்தகைய ஒரு செயலுடன் தொடர்புபடும் சந்தர்ப்பங்களில் அது குறித்து அறிந்தபோதிலும் சமூகத்திற்கு முகங்கொடுப்பதில் உள்ள சிக்கல் காரணமாக வயதுவந்தோர் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முற்படாத சந்தர்ப்பங்களும் உள்ளன.

சில கரையோர சுற்றுலா வலயங்களிலும் பொருளாதார நன்மை கருதி இத்தகைய செயல்களுக்கு உடந்தையான வயதுவந்தவர்கள் இருப்பதும் இங்குள்ள மற்றுமொரு இருள்படர்ந்த ஒருமுகத்தோற்றமாகும். மேலைத்தேய நாடுகளிலிருந்து இத்தகைய செயல்களைப் புரியும் நோக்குடனேயே இலங்கைவரும் சுற்றுலாப் பயணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியிருக்கும் ஒரு போக்கு குறித்து கடந்த காலத்தில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சுற்றுலாச் சபை (Tourist Board), சர்வதேச பொலிசு (Interpol)* ஆகியவற்றின் உதவியுடன் இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது பொறுப்புடையவர்களின் கடமையாகும்.

பராயமடையாதவர்கள் (Minor) பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது, ஏனைய தெற்காசிய நாடுகளுக்கு ஒப்பீடாக ஓரளவு குறைவாக இருந்தபோதிலும், இன்னும் இந்தப் பிரச்சினை குறிப்பிடத்தக்க அளவில் எமது நாட்டிலும் உள்ளது. வீட்டு வேலைகளுக்கும், வர்த்தக நிலையங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலைக்கும் சிறுவர் உழைப்பாளர்கள் பெருமளவுக்கு ஈடுபடுத்தப்படுகின்றனர். அத்தகைய இடங்களில், அவர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற உடலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதையும் அநேகமாகக் காணமுடிகிறது. இது பாடசாலை செல்லும் பராயத்திலுள்ள அவர்களின் கல்வி பெறுவதற்கான உரிமையை மீறுகின்ற செயலாகும். இலங்கையில் அமுலிலுள்ள சட்டங்களின் கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றமாக அமையும் இத்தகைய செயல்களைத் தடுப்பதற்கு பொலிசாரும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் (NCPA) போற்றுதற்குரிய பணியைச் சிரமேற்கொண்டு வருகின்றன.

- **இலஞ்சம் பெறுதலும், இலஞ்சம் வழங்குதலும், மோசடிச் செயல்களும்:** இலஞ்சம் பெறுதலும், இலஞ்சம் வழங்குதலும் (Bribery) எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள குற்றச்செயல்களுள் ஒன்றாகும். ஒரு நிறுவனத்திடமிருந்து (குறிப்பாக, அரசதுறை நிறுவனங்கள்) யாதேனும் ஒரு பணியை நிறைவேற்றிக் கொள்வதற்காக உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தொகைக்குப் புறம்பாக இடம்பெறும் கொடுப்பனவுகள் இதன் கீழ் வருகின்றன. இத்தகைய ஒரு நிலை பரம்பலடையும்போது அந்த நிறுவனத்தின் வினைத்திறன் (Efficiency) குன்றுவதற்குப் புறம்பாக, அந்த நிறுவனத்திலிருந்து சேவைபெறும் சேவை நாடுநர் (Client) அநீதிக்கு உள்ளாவார். இலஞ்சம் வழங்க முடியாதவர்கள் அங்கு தமது பணிகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுவதுடன், நிருவாகத்தின் மீது அவர்களுக்கு விரக்தி மனப்பான்மை ஏற்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

அரசாங்க உடைமைகளையும், வளங்களையும் சொந்தத் தேவைகளுக்காகக் கையாள்வது ஒரு மோசடி செயல் (Corruption) எனப்படும். அரசாங்க நிறுவனங்கள் வசமுள்ள வாகனங்கள், கட்டிடங்கள் அல்லது காணிகள் முதலியவற்றைச் சட்டவிரோதமான முறையில் அரசாங்க அலுவலர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் இவ்வாறு கையாள்வது பரவலாக அவதானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. குறிப்பாக, தேர்தல் காலங்களில் இதனைத் தெளிவாக அவதானிக்கலாம். இவற்றைத் தடுப்பதற்காக மக்களின் பரந்துபட்ட தலையீடொன்று அவசியமாகின்றது. அன்றேல், அரசாங்க சேவை சீரழிவதும், தேசிய வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் செல்வதும் காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றுவதன் மூலம் நாட்டில் வறுமைநிலை (Poverty) வளர்ச்சியடையலாம். ஆகையால், இத்தகைய நிலைமைகளுக்கு எதிராக செயலாற்றுவது பொதுமக்கள் என்ற வகையில் நம் அனைவரும் மீதுள்ள கடமையாகும். இத்தகைய சந்தர்ப்பங்கள் பற்றி தகவல் கிடைத்தால், அவற்றுக்கு எதிராகச் செயலாற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) போன்ற நிறுவனங்களுக்குத் தாமதமின்றி அறியக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களைத் தடுப்பதில் தனி நபரின் செயற்பொறுப்பு

குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு நாம் தனி நபர்களாகவும், சமூகத் தலைவர்களாகவும், அரச நிறுவனங்களாக அல்லது சிவில் சமூக அமைப்புக்களாகவும் பாரியதொரு பணியை ஆற்ற வேண்டியுள்ளது. இங்கு அது தொடர்பாக நாம் ஆராய முற்படுகிறோம்.

**குற்றச்செயல்களை இனங்காணல்:** ஒவ்வொரு தனிநபரையும் கொண்டதாக சமூகம் ஒழுங்கமைந்துள்ளதால், சமூகத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பிலும் ஒவ்வொரு தனிநபருக்கும் சம அளவான பொறுப்புண்டு. அமைதியான ஒரு சூழலில் மகிழ்ச்சிகரமாக வாழ்வைக் கழிப்பது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரினதும் ஒரே எதிர்பார்ப்பாகும். எனினும், நானும் நீங்களும் வாழும் சூழல் குற்றச்செயல்கள் மலிந்த, முறுகல்கள் நிறைந்த ஒரு சூழலாயின் மகிழ்ச்சியான வாழ்க்கை அமைவதென்பது வெறும் கற்பனை மாத்திரமே. ஏனெனில், யாதேனும் குற்றச்செயலிநர் காரணமாக உமது அயலவர் இழப்பை எதிர்நோக்கினால் அடுத்த மணித்தியாலத்தில் அந்த இழப்பு உம்மை நோக்கியும் வருவதற்கான நிகழ்தகவு இருப்பதாலாகும். ஆகையால், உங்கள் அயலவர் ஒருவர் குற்றச்செயலொன்றுக்கு இரையாகும்போது உங்களால் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு மௌனித்திருக்க முடியாமல் செல்லும். ஏனெனில், அது உங்களுக்கே ஆபத்தை வருவித்துக்கொள்வதாக இருப்பதாலாகும்.

குற்றச்செயல் (Crime) என்பதை அதன் சொல்லார்த்தத்தில் நோக்கின், நியமமான சட்டத்தின்கீழ் கடும் தண்டனை அளிக்கப்படக்கூடிய செயல் எனலாம். சட்டம் என்பது ஆளொருவர் சிறப்பாக வாழ்வதற்காக காண்பிக்கப்படும் ஒரு வழிகாட்டல் எனக் குறிப்பிடலாம். எந்தவொரு சட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்போந்த நோக்கத்துடனேயே உருவாக்கப்பட்டுள்ளது. நல்வாழ்வு வாழ்தல் என்பது தனது மனச்சாட்சிக்கு இணங்க அன்றேல் உள்ளத்திற்கு ஒப்புரவாக வாழ்வதாகும். இறுதியில் மனச்சாட்சியைப் பின்பற்றுதல் என்ற எண்ணக்கருவை முன்வைத்தே சகல சட்ட முறைமைகளுக்குமான அடிப்படை வகுக்கப்பட்டுள்ளது என்பதனால், அவ்வாறே வாழும் ஒருவராயின் உங்களால் ஒருபோதும் சட்டம் மீறப்பட மாட்டா. (சட்டம் பற்றிய அறிவு இன்றிய போதிலும்) சமூகத்தில் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கெனில் முதலில் நாம் ஒவ்வொருவரும் மனச்சாட்சியின் சட்டத்திற்கு மதிப்பளிப்பது முக்கியமானதாகும். அவ்வேளை, தானாகவே பொது அங்கீகாரம்பெற்ற, நியமமான சட்டம் பாதுகாக்கப்படும். எவ்வாறாயினும், நாட்டில் அமுலிலுள்ள பொதுச் சட்டம் பற்றிய புரிந்துணர்வொன்று நம்முள் இருப்பது தேவையற்றது என்பது இதன் பொருளாகாது. அது பற்றிய அறிவைப் பெற்றிருப்பது எமக்கு எப்பொழுதும் முக்கியமானதாக அமையலாம்.

**குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மீது பரிவு காட்டுதல்:**
குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மீது பரிவு காட்டுவதற்கும் துரிதமாக உதவுவதற்குமான முக்கிய ஒரு சமூகப் பொறுப்பு நம்மீது உள்ளது. அத்தகைய உதவி அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் உள ரீதியான நிவாரணம் போன்ற எளிய ஒன்றிலிருந்து சிலவேளைகளில் அதனை விடச் சிரமமான ஒன்றாக அமையலாம். அது எத்தகையதொன்றாக அமைந்தபோதிலும், அது வேளைக்கேற்ப மிகவும் பயனுள்ளதாக அமையும். குறிப்பாக, துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள், பாலியல் துன்புறுத்தலுக்கு இரையான பெண்கள் போன்றோர் மீது இது சிறப்பாக ஏற்புடைத்தாகும். சிலவேளைகளில் இத்தகையோர் குறித்த சம்பவம் ஏனையோரின் கர்ச்சனைக்கும் காரணமாக அமையலாம். அவர்களுக்கு உள ரீதியாக மீண்டும் பழைய நிலைமைக்கு மீளுவதற்கான மதியுரைச் சேவையின் துணையும் சிலவேளைகளில் அவசியப்படலாம். ஆகையால், அதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். பெருமளவுக்கு அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக தேவைக்கேற்றவாறு பகிரங்கப்படுத்துவது அவர்களை சமூக ரீதியில் சிக்கலான நிலைக்கு ஆளாக்குவதாக அமையும் என்பதால் அது குறித்தும் கவனத்திற்கொள்வது முக்கியமானதாகும்.

இனவாத முறுகல்கள் போன்ற வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் அவ்வாறே ஏனையோரின் உதவி கிட்டுவது அவசியமாகும். அத்தகைய ஒரு சம்பவத்தின் பின்னர் பெருமளவுக்கு அவர்கள் பெரும் பீதியுடன் இருப்பர். ஆகையால், முதலில் அவர்களின் அச்சத்தைப் போக்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்வது முக்கியமானதாகும். சிலவேளைகளில், அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படும்போது தற்காலிக வசிப்பிடங்கள், ஆடைகள், உணவுபானங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். அத்துடன், வன்செயல்கள் காரணமாக அவர்களுள் ஏற்பட்டுள்ள உள ரீதியான சோர்வு நிலையையும் இன ரீதியான குரோத உணர்வையும் நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் ஊடாக மீண்டும் அத்தகைய முறுகலான சூழலொன்று தோற்றம்பெறுவதற்கான வாய்ப்புக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**குற்றச்செயலொன்று இடம்பெற்றவுடன் துரிதமாக அதிகாரிகளுக்கு அறியக்கொடுத்தல்:** குற்றச்செயலொன்று இடம்பெறும் வேளையில் அது குறித்து பொலிசு அடங்கலாக தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு அறியக்கொடுப்பதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் முற்படுவதில்லை. தமது சமூகப் பொறுப்பைத் தட்டிக்கழித்து நழுவிச்செல்லும் போக்கு என அதனைக் கூறலாம். குற்றச்செயலொன்றுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள், வாகனங்கள் முதலியன குறித்த திருத்தமான தகவல்களை அறிந்துவைத்திருந்த போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய தகவல்களைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் தமக்கு இடையூறுகள் நேரிடலாம் என்ற எண்ணம் காரணமாக தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு அது குறித்து அறியக்கொடுக்க அவர்கள் முற்படுவதில்லை. அது அத்தகைய குற்றச்செயல்களைப் புரிந்தோர் கைது செய்யப்படுவதற்கும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கும், இறுதியில் குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட நபருக்கு நியாயம் கிட்டச்செய்வதற்கும் பெருமளவுக்கு தடங்கலாக அமைவதாகும். குற்றச்செயல்களைப் புரிந்தோர் யாரென்பது தெளிவாகவே அறியப்பட்ட நிலையிலும் போதியளவு சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள எவருமே முன்வராமை காரணமாக அவர்கள் இலகுவாக சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அது குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்களின் தரப்பிலிருந்து நோக்கும்போது பாரதூரமான ஓர் அநீதியாக இருப்பதுடன் மாத்திரமன்றி, மற்றும் பல குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கும் தவறாளிகளுக்கு கிடைக்கும் ஊக்குவிப்பாகவும் அமையும்.

ஆட்கடத்தல் (Abduction) போன்ற ஒரு விடயத்தின்போது அது தொடர்பாக உடன் பொலிசாருக்கு அறியக்கொடுப்பது அவசியமாகும். இங்கு தேவையற்ற விதத்திலான கால தாமதங்கள் சிலவேளைகளில் அவ்வாறு கடத்திச்செல்லப்பட்ட நபரின் உயிருக்கான ஆபத்தின் தன்மையை அதிகரிக்கக் காரணமாக அமையும். குறிப்பாக, கப்பம் கோருதல் போன்ற ஒரு காரணத்தின் பேரில் கடத்திச்செல்லப்பட்ட ஆளொருவர் பற்றி, அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக தொடர்புபட்ட குடும்பத்தவர்கூட பொலிசாரின் உதவியை நாடாதிருக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய ஒரு நிலைமை உண்மையில் குறித்த நபரின் உயிருக்கான அச்சுறுத்தலை மேலும் அதிகரிக்கக் காரணமாக அமையலாம்.

சிறுவர் துஷ்பிரயோகம் (Child Abuse) தொடர்பான ஒரு சம்பவம் அல்லது சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் (Child Labour)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான ஒரு சம்பவம் எனில், பொலிசுக்குப் புறம்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) போன்ற ஒரு நிறுவனத்திடமும் முறைப்பாடு செய்வதற்கான வாய்ப்புள்ளது. சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் பெரும்பாலும் பெற்றோர் அல்லது வளர்ந்தோர் அறியாத நிலையிலேயே இடம்பெறுவதாதலாலும், அவ்வாறு அறிந்தபோதிலும் பல்வேறு காரணங்களின் பேரில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்படாத சந்தர்ப்பங்களும் பெருமளவுக்கு உள்ளதால் தாம் குறித்த குடும்பத்திற்கு வெளியிலுள்ள ஆட்களான போதிலும் அத்தகைய சம்பவம் பற்றி அறிந்த உடன் மேற்போந்த நிறுவனங்களுக்கு அறியக்கொடுப்பது ஒவ்வொரு பிரசையினதும் பொறுப்பாகும். பெயர் விபரத்தை அறியக் கொடுக்காமலும் அத்தகைய முறைப்பாடுகள் முன்வைக்கப்படலாம்.

**தலைமைத்துவ முன்மாதிரி:** குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்தி சமூகத்தைச் சீரான பாதையில் இட்டுச்செல்வதற்கான பாரிய ஒரு பொறுப்பு தலைவர்களுக்கு உண்டு. இங்கு, அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள் போன்ற தரப்பினர் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் வழங்கும் முன்மாதிரி ஏனையோர் எப்பொழுதும் அவர்களைப் பின்பற்றி ஒழுகுவதற்குத் தூண்டுகோளாக அமைவதால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏதோவொரு விதத்தில் மேற்போந்த தரப்பினர் வன்செயல்களில் அன்றேல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவார்களாயின் அவர்களைப் பின்பற்றுவோரும் அவற்றில் ஈடுபடுவர். குறிப்பாக, சமூகத்திலிருந்து வன்செயலை இல்லாதொழிப்பதற்கான மிகப்பெரும் சாத்தியம் அரசியல் தலைவர்கள் வசம் உள்ளது. மறுபக்கம், வன்செயலை வெறுத்தொதுக்கும் அரசியல்வாதிகள் நிலைத்திருப்பதுடன், மக்களால் கவரப்படுவர். அமைதியான முறையில் செயற்படுவதன் ஊடாகவும் தமது நோக்கங்களை மிகவும் வெற்றிகரமாக எய்த முடியும் என்பதை மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பாரிய சனசமூக அமைப்புக்களை வழிநடாத்திய தலைவர்கள் எமக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**பொலிசு பொதுமக்களுக்கு மிகவும் நெருங்கிய, நட்புறவான ஒரு நிறுவனமாக:** குற்றச்செயல்கள் தொடர்பாக பொலிசாருக்கு அறியக்கொடுக்க முன்வரும் ஆட்களை சிரமத்திற்கு உள்ளாக்கும் விதத்தில் நடந்துகொள்ளும் பொலிசு அலுவலர்களையும் சிலவேளைகளில் காணமுடிகின்றது. சிலவேளைகளில், அத்தகையவர்களிடம் சந்தேக நபர்களிடம் கேள்வி கேட்பது போல விசாரிக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. மிக அரிதாக அல்லது அத்தகைய ஒரு நிலைமையில் பொதுமக்கள் அவசியமான தகவல்களைத் தெரிவிக்கத் தயங்குகின்றனர். ஆகையால், குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்தும் பணி பற்றி ஆராயும்போது இந்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும். அதற்காக பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான, மிகவும் நட்புறவான சேவையை வழங்கும் ஒரு நிறுவனமாக பொலிசுத் திணைக்களம் மாறுவது அவசியமாகும். அத்தகையை ஒரு அணுகுமுறை தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்றத் தடங்கலாக அமையும் என்ற தவறான எண்ணங்கொண்ட ஒருசில பொலிசு அலுவலர்களும் உள்ளனர். எனினும், உண்மையில் அவ்வாறு நட்புறவாக இருப்பதன் ஊடாக குற்றச்செயல்கள் குறித்த தகவல்களைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமையுமென்பதால், அவர்களின் கடமையைச் சிறப்பாக ஆற்றுவதற்கு மிகவும் வசதியாக அமையும். பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நட்புறவை வளர்ப்பதற்காக முதலில் அத்தகைய அலுவலர்களின் உளப்பாங்கில் மாற்றமொன்று ஏற்படுவது அவசியமாகும். அவர்களால் ஆற்றப்படுவது, இராணுவக் கடமையன்று. மாறாக, சிவில் சமூகத்தவர் சார்பாக சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கான ஒரு சூழலை உருவாக்குதே. எனவே, அதற்கேற்ற நட்புறவான ஒரு புகழுருவை பொலிசு அலுவலர்கள் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானதாகும். மறுபக்கம், ஒரு நாட்டில் சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்படுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல்களை முறியடித்தல் ஆகியன குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவது அவசியமாகும். இது பாடசாலை மட்டத்திலும் சனசமூக அமைப்புகள் மட்டத்திலும் அமுல்படுத்தப்பட வேண்டும். அது இரு தரப்பினருக்கும் இடையில் நட்புறவை வளர்ப்பதற்கான அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கும் தூண்டுகோளாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்செயல்களின்பால் ஈர்க்கப்படுவதற்கான போக்கு அதிகமாகவுள்ள ஆட்கள், குற்றச்செயல்கள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் ஆகியன குறித்து அதிக கவனம் செலுத்துதல்.

சமூகத்தின் சகல படிநிலைகளைச் சார்ந்தவர்களாலும் குற்றச்செயல்கள் மேற்கொள்ளப்படலாம். எனினும், அத்தகைய செயல்களின்பால் கூடுதலாக தூண்டப்படும் பல தொகுதிகளாக நோக்கக்கூடிய ஆட்கள் உள்ளனர். ஆகையால், குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்தும் பணியில் அத்தகைய தரப்பினர் குறித்து பொதுமக்களின் கூடுதல் கவனம் எப்பொழுதும் செலுத்தப்படுதல் வேண்டும். அதன் மூலம் அவர்கள் மேற்கொள்ள முற்படும் குற்றச்செயல்களைக் குறைத்துக்கொள்ளக்கூடியதாக அமையும்.

**போதைப்பொருள்களுக்கு அடிமையானோர்:** மதுபானம், போதைப்பொருள்களுக்கு அதிகளவில் அடிமையானோர் நாளாந்தம் பாரிய ஒரு தொகைப் பணத்தை அவற்றுக்காகச் செலவிட நேரிடுகின்றது. எனினும், கஷ்டப்பட்டு உழைத்து பணம் ஈட்டுமளவுக்கு அத்தகையவர்களிடம் பெரும்பாலும் உடற்பலம் இருப்பதில்லை. இத்தகையதொரு நிலைமையின் கீழ் இலகுவில் பணம் ஈட்டும் வழிகளாக அவர்கள் தொடர்ந்தும் திருட்டு முதலிய குற்றச்செயல்களைப் புரிய முற்படுவர். போதைப்பொருள்கள் காரணமாக மனநிலை பாதிக்கப்பட்ட இத்தகைய ஆட்கள் சிலவேளைகளில் கொலைகளைப் புரிதல் போன்றே, கொடூர, படுபாதக குற்றச்செயல்களைக்கூட புரிவதற்கு முற்படலாம். ஆகையால், இத்தகையோருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது முக்கியமானதாகும்.

**இராணுவ சேவையிலிருந்து தப்பியோடிய ஆட்கள்:** கடந்த காலத்துள் எமது நாட்டில் இடம்பெற்ற கொடூரமான குற்றச்செயல்கள் குறித்து ஆராயும்போது, ஆயுதந்தாங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளிலிருந்து அனுமதியின்றி வெளியேறிய ஆட்கள் அவற்றுள் அதிகமான சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அவர்கள் பெற்றுள்ள சுடுபடைக்கலன்கள்/ துப்பாக்கிகளைப் பாவிப்பதற்கான பயிற்சியும், சட்டவிரோத துப்பாக்கிகள் நாட்டினுள் பெரும்பாலும் வியாபித்திருப்பதும் இத்தகைய செயல்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்பானதாக உள்ளது. பெரும்பாலும் அவ்வாறு தப்பியோடும் போர் வீரர்களுக்கு தொழில் பெற்றுக்கொடுக்க ஏனைய நிறுவனங்கள் தயங்குவதும், குற்றச்செயல்களில் ஈடுபடுவதைத் துரிதமானதும் இலகுவானதுமான செல்வமீட்டும் ஒரு மார்க்கமாகக் கருதுவதும் காரணமாக அவர்கள் அவற்றின்பால் தூண்டப்படுகின்றனர். போர் நிலைவரத்தின் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் போர் வீரர்கள் இராணுவ சேவையிலிருந்து தப்பியோடுவது, உள்நாட்டுப் போர் நிலவும் எந்தவொரு நாட்டிலும் அவதானிக்கக்கூடிய ஒரு நிலைமையாகும். அத்தகையோர் பல்வேறு குற்றச்செயல்களுடனும் தொடர்புபடுவது அத்தகைய பல நாடுகளும் எதிர்நோக்கும் பொதுவான ஒரு பிரச்சினையாகும்.

**வேறு பல தவறுகளுக்காக சிறையிடப்பட்டு விடுதலையானோர்:** சிறு தவறொன்றுக்காக ஆளொருவரை சிறையிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, அவரை நல்வழிக்குத் திருப்புவதாகும். எனினும், அத்தகைய சிறைக்கைதிகள் சிறையிடப்பட்டிருக்கும் காலத்தில் கொடூர குற்றச்செயல்களைப் புரிந்தவர்களுடன் நட்புடன் பழகுவதற்கு வாய்ப்புக் கிட்டுவதன் காரணமாக சிறைவாசத்தின் பின் அவர்கள் அந்த நிலைக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இது கவலைக்கிடமான ஒரு போக்காகும். இத்தகைய ஆட்கள் வழிப்பறி கொள்ளை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆகையால், அத்தகைய நிலைக்கு உள்ளாவதற்கு வாய்ப்பளிக்காமல் அவர்களை நற்பிரசைகளாக மாற்றுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகள் முதலிய துறைகளின்பால் ஈடுபடுத்துவதும் முக்கியமானதாகும். அவ்வேளை, அவர்கள் விடுதலையாகி திரும்பியதும் அந்த அறிவை வருமானமீட்டும் மார்க்கமாகப் பயன்படுத்த முடியும்.

**குற்றச்செயல்களுக்கு உள்ளாகக்கூடிய இடங்கள், ஆட்கள் குறித்து விழிப்புடன் இருத்தல்:** குற்றச்செயல்களைப் புரிவதற்குத் தூண்டப்படும் ஆட்கள் குறித்தும், அவற்றுக்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புள்ள ஆட்கள் குறித்தும் மிகவும் விழிப்பாக இருப்பது முக்கியமானதாகும். குறிப்பாக, சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோக செயல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பில் இது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. அவர்களுடன் பழகுவோர் குறித்து விழிப்புடன் இருப்பது குறிப்பாக பெற்றோரின் முக்கிய ஒரு பொறுப்பாகும். அவ்வாறே, அவர்களின் நடத்தைக்கோலம் குறித்து அதிக கவனம் செலுத்துவதும் அவசியமாகும். மேலும், குற்றச்செயலிநர்களின் இலக்காக அமையக்கூடிய ஆட்கள் குறித்தும் வீடுகள், வர்த்தக நிலையங்கள் முதலிய இடங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படுவது முக்கியமானதாகும்.

## குற்றச்செயல்களைத் தடுப்பதில் சிவில் அமைப்புக்களின் செயற்பொறுப்பு

குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக நீங்களும் நாங்களும் தனி நபர்கள் என்ற வகையிலும், சிவில் அமைப்புக்கள் என்ற வகையிலும் ஆற்றக்கூடிய செயற்பொறுப்பொன்று உள்ளது. இங்கு, நேரடியாகவே அந்த நோக்கத்துக்காகவே அமைக்கப்பட்ட நிறுவனங்களாகவும், சமூகத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களுக்குக் காரணமாக அமையும் அம்சங்களை அகற்றுவதன் ஊடாகவும் அமைதி குடிகொண்டிருக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக மறைமுகமாக எம்மால் பங்களிப்பு நல்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றச்செயல்களையும் வன்செயல்களையும் தடுத்துநிறுத்துவதற்கு ஓர் அமைப்பாக ஒன்றிணைதல்:** அரசியல் வன்செயல்கள், இனவாத மோதல்கள் போன்றவற்றின் காரணமாக சிலவேளைகளில் மக்கள் வாழ்வு முழுமையாக ஸ்தம்பிதமடையும் சந்தர்ப்பங்கள் தோன்றுகின்றன. அத்தகைய நிலைமைகளில் வெளியாரின் தலையீட்டினால் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக செயலாற்ற முற்படுவது சிலவேளைகளில் பிரச்சினையின் பரிமாணத்தை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குவதற்கு ஏதுவாக அமையலாம். ஆகையால், அத்தகைய சந்தர்ப்பங்களில் குறித்த பரப்பு அல்லது மக்கள் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும், மக்கள் அபிப்பிராயம் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மதத் தலைவர்கள், பிரபுக்கள் முதலியோர் ஒன்றிணைந்து செயலாற்றுவது மிக முக்கியமானதாகும். அவ்வேளை, பிரச்சினை உருவானவுடன் அவர்களால் எடுக்கப்படும் மதிநுட்பமான அணுகுமுறைகள் மூலம் அவற்றைத் தீர்த்துக்கொள்ளக்கூடியதாக அமையும். அத்தகைய சந்தர்ப்பங்களில் மக்களிடையே சகோதரத்துவத்தையும் நட்புறவையும் மீண்டும் வளர்த்து, கூட்டொத்துழைப்பைக் கட்டியெழுப்பி நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகின்றது. தற்போது நாடு முழுவதிலும் செயற்படும் பிரஜைகள் குழுக்கள் இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும்.

**குற்றச்செயல்கள், சிவில் சட்டமும் உரிமைகளும்/ கடமைகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்தல்:** சிலவேளைகளில் சட்டம் குறித்தும், அதன் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் விதம் குறித்தும் மக்கள் மத்தியில் நிலவும் புரிந்துணர்வின்மை காரணமாக அது குறித்து கரிசனை கொள்ளாத ஒரு நிலைமை
ஏற்படுகின்றது. ஆகையால், குற்றச்செயல்கள் குறித்தும், அவற்றுக்கான பின்புலத்தை அமைத்துக்கொடுக்கும் காரணிகள் குறித்தும் குற்றச்செயல்கள், சிவில் சட்டம் ஆகியன மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் விதம் குறித்தும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்துவது சிவில் அமைப்புக்களால் ஆற்றப்படவேண்டிய மற்றுமொரு முக்கிய பணியாகும். இதற்காக பொலிசு அலுவலர்கள், சட்ட அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் முதலிய தரப்பினரைத் தொடர்புபடுத்திக்கொள்வது முக்கியமானதாகும். அவ்வாறே, குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்துவதற்காக சமூகத்திற்கும் முக்கிய ஒரு பொறுப்புள்ளது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதும் அவசியமாகும். சமூகத்திற்குள்ள வாக்குரிமை, மனித உரிமைகள் முதலியவற்றை தற்காத்துக்கொள்வதிலுள்ள முக்கியத்துவம் குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் முக்கியமானதாகும்.

**ஆயுதக் கையாளலைத் தடுத்துநிறுத்துவதற்காகச் செயலாற்றல்:** குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கு சுடுபடைக்கலன்கள் அடங்கலான ஆயுதங்கள் பெருமளவுக்குக் காரணமாக அமைகின்றன. தற்போது பலதரப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான சிறு ஆயுதங்கள் எமது நாட்டில் பரம்பலடைந்துள்ளன. ஆகையால், அத்தகைய ஆயுதங்களின் பரம்பலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கான மக்கள் அபிப்பிராயமொன்றை உருவாக்குவதற்கும், ஆயுதக் கையாளல் கலாசாரத்திலுள்ள அச்சம் சூழ்ந்த, ஆபத்தான நிலையைப் பொதுமக்களுக்குப் புரியவைப்பதற்கும் சிவில் அமைப்புக்கள் செயலாற்றுவது அவசியமாகும்.

**சமூகத்தில் குற்றச்செயல்களின் பரம்பலுக்குத் தூண்டுகோளாக அமையும் போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை விடுவித்துக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல்:** முன் குறிப்பிடப்பட்டவாறு சமூகத்தின் மத்தியில் குற்றச்செயல்களின் பரம்பலுக்கு போதைப்பொருள்கள் முக்கிய பங்காற்றுகின்றன. ஆகையால், அவற்றின் பரம்பலைக் குறைத்துக் கொள்வதற்கு உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் குற்றச்செயல்கள் குறைவடையும் என உறுதியாக நம்பலாம். போதைப்பொருள் எதிர்ப்பு இயக்கங்கள் (Anti Narcotic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Movements) இந்த விடயத்தில் தொழிற்படு பங்களிப்பொன்றை வழங்க முடியும். போதைப்பொருள்களின் தீங்குபயக்கும் தாக்கம் குறித்து குறிப்பாக, இளைஞர்கள் மத்தியில் விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

**வறுமைநிலையையும் அறியாமைநிலையையும் ஒழிப்பதற்காகச் செயலாற்றுதல்:** சமூகத்தில் குற்றச்செயல்களின் பரம்பல் மீது வறுமைநிலையும் அறியாமைநிலையும் பெரும் பங்களிப்பாற்றுகின்றது என்பது பொதுவாக அறியப்பட்ட ஓர் உண்மையாகும். மக்களின் பொருளாதார ஆற்றலை வளர்ப்பதற்கு உறுதுணையாக அமையும் சுயதொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல், அதற்கு அவசியமான உபகரணங்களையும் மூலதனத்தையும், உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் முதலிய துறையில் செயலாற்றுவது உகந்ததாகும். அவ்வாறே, அவர்களின் கல்வி ஆற்றல்களை முன்னேற்றிக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் உகந்ததாகும். சமூகத்திலிருந்து குற்றச்செயல்களை இல்லாதொழிப்பதில் இந்தத் துறையில் செயலாற்றும் அமைப்புக்கள் மறைமுக பங்களிப்பாற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் குற்றச்செயல்களுக்கு எதிரான ஒருவராயின், குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்துவதில் கூட்டிணைந்து செயலாற்றுங்கள்.

குற்றச்செயல்களுக்கு எதிராகச் செயலாற்றும்போது தனித்துச் செயலாற்றுவதை விட கூட்டிணைந்து ஓர் அமைப்பாகச் செயலாற்றுவதன் மூலமே அந்த முயற்சி பெரிதும் வெற்றிபெறும். அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் அவற்றை உறுதியாக எதிர்கொள்ளக்கூடியதாக அமைவதுடன், குற்றச்செயல்களின்பால் தூண்டப்படும் ஆட்கள் உற்சாகத்தை இழப்பர். தேர்தல்கள் சார்ந்த வன்செயல்களுக்கு எதிராக மக்கள் அணிதிரண்டமை இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். 1980 தசாப்தம், எமது நாட்டில் தேர்தல் சார்ந்த வன்செயல்களும் அவை சார்ந்த குற்றச்செயல்களும் பரவலாக இடம்பெற்ற ஒரு காலப்பகுதியாகும். அரசியல்வாதிகள், வன்முறையாளர்கள், காடையர் கும்பல்களிடமிருந்து தொடக்க கட்டத்தில் ஓர் அமைப்பாக ஒன்றிணையாமல் வன்செயல்களுக்கு எதிராகச் செயற்பட்ட ஆட்களுக்கு அச்சுறுத்தல்கள் எழுந்தன. எனினும், 1990 தசாப்தத்தின் நடுப்பகுதி அளவில் தேர்தல் வன்செயல்களுக்கு எதிராகச் செயலாற்றக்கூடிய பலம்பொருந்திய சனசமூக அமைப்புக்களின் வலையமைப்பொன்று தோற்றம் பெற்றது. பொலிசு, தேர்தல் அலுவலர்கள், நிருவாக அலுவலர்கள், ஊடகத் துறையினர் உள்ளிட்ட சகல துறையினரும் தமது கடமையைப் பக்கச்சார்பின்றி மேற்கொள்வதில் எதிர்நோக்கிய பல்வேறு தடங்கல்களும் அதன் மூலம் தணிந்தன. இன்றளவில் அத்தகைய வன்செயல்கள் மிகவும் குறைந்த மட்டத்தை அடைந்திருப்பது அதன் இறுதிப் பெறுபேறாகும். தற்போது அரசியல்வாதிகள் அடங்கலாக சகல துறைகளினதும் ஒத்துழைப்பு அதற்குக் கிடைத்த வண்ணமுள்ளது. சட்டவிரோத/ கள்ளச் சாராயம் தயாரிப்போர், போதைப்பொருள் கடத்தல் வியாபாரிகள் போன்ற தரப்பினரால் மேற்கொள்ளப்படும் பல்வேறு குற்றச்செயல்களையும் முறியடிப்பதற்கும், அரசியல் வாதிகளாலும், அரசாங்க அலுவலர்களாலும் மேற்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் அத்தகைய கூட்டு முயற்சிகள் வாயிலாக வாய்ப்புக் கிட்டிய சந்தர்ப்பங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் பல்வேறு சம்பவங்கள் பற்றியும் கடந்த காலத்தில் அறிய முடிந்தது.

**குற்றச்செயலிநர் பற்றியும், அவர்களின் செயல்கள் பற்றியும் தாமதமின்றி அதிகாரிகளுக்கு அறியக்கொடுங்கள்.**

குற்றச்செயலொன்று பற்றி அறிந்தவுடன் அது குறித்து பொலிசார் அல்லது வேறு பொறுப்புடைய ஒரு நிறுவனத்திற்கு அறியக்கொடுப்பதில் சிலவேளைகளில் மக்கள் அந்தளவு கரிசனை கொள்ளாத சந்தர்ப்பங்களும் உள்ளன. குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்துவது தொடர்பில் கருத்திற்கொள்ளும்போது இது மிகவும் மோசமாக ஒரு போக்காகும். ஒருபக்கம், அது மேலும் குற்றச்செயல்களைப் புரிவதற்கு குறித்த நபர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். பொலிசு அல்லது அத்தகைய ஒரு நிறுவனத்திற்கு அறியக்கொடுப்பதற்குப் புறம்பாக சிலவேளைகளில் அயலவர்களுக்கு அறியக்கொடுப்பது பயனுள்ளதாக அமையலாம். உதாரணமாக, கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெறும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு அறியக்கொடுப்பது அவர்களும் பாதுகாப்புப் பெறுவதற்கு உதவியாக அமைவதால் அது குறித்து கவனம் செலுத்தவும். அதற்குப் புறம்பாக, குற்றச்செயலிநர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கும், குற்றச்செயல்கள் காரணமாக துன்பப்படுவோருக்கு நியாயம் கிட்டச் செய்வதற்காக சாட்சியம் அளிப்பதும் மிகவும் முக்கியமானவையாகும். பொலிசுக்குப் புறம்பாக இலஞ்சல் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), கலால்வரித் திணைக்களம் (Department of Excise), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) போன்ற நிறுவனங்களுக்கும், குறித்த குற்றச்செயலின் தன்மைக்கேற்ப தகவல் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எப்பொழுதும் எச்சரிக்கை உணர்வுடனும் விழிப்புடனும் இருங்கள்.**

எச்சரிக்கை உணர்வு குற்றச்செயல்களைத் தடுப்பதில் இன்றியமையாத ஓர் அம்சமாகும். மேலோட்டமாக நோக்கின் குற்றச்செயலிநர்களின் நடத்தை, பயணப்பொதிகள், வாகனங்கள் முதலியன குறித்து மிக விழிப்பாக இருக்க வேண்டுமென்பது இதன் மூலம் கருதப்படுகின்றது. மக்கள் விழிப்பாக இருப்பதைப் புரிந்துகொள்ளும் குற்றச்செயலிநர் அத்தகைய செயல்களில் ஈடுபட முற்பட மாட்டார்கள். மறுபக்கம், நல்ல நனவுணர்வுடன் செயலாற்றுவது தமது நடத்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் தூண்டுகோளாக அமையும். சிலவேளைகளில், திடீர் கோபம் போன்ற உணர்ச்சிவேகம் காரணமாகவும் ஆளொருவர் குற்றச்செயல்களின்பால் தூண்டப்பட வாய்ப்புள்ளது. எனினும், தமது நடத்தை குறித்து புரிந்துணர்வுடன் செயற்படும் ஆளொருவரிடமிருந்து அத்தகைய உணர்ச்சி வேகம் காரணமாக ஏற்படக்கூடிய அழிவு நாசகார நடத்தைகள் வெளிப்படுவதில்லை. அந்தப் பொருளில் நோக்கின், தமது நாளாந்தப் பணிகளில் செயல்முனைப்புடன் ஈடுபடல், சிறந்த சிந்தனை ஆகியன குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்துவதில் இரு வகையில் பயனுடையவையாக அமைகின்றன.

**குற்றச்செயல்களுக்கும் துன்புறுத்தலுக்கும் எதிரான உளப்பாங்குகளை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு நல்குங்கள்.**

குற்றச்செயல்களுக்கும் துன்புறுத்தலுக்கும் எதிரான மனோநிலையை சிறுவர்களின் மனதில் சிறுவயது முதல் வளர்ப்பது முக்கியமானதாகும். அவ்வேளை, அவர்கள் வளர்ந்தவர்களானதும் அத்தகைய செயல்களில் ஒருபோதும் ஈடுபடுவதற்குத் தூண்டப்பட மாட்டார்கள். இது குறிப்பாக பெற்றோரும், ஆசிரியர்களும் ஆற்ற வேண்டிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாகும். எனினும், சில பெற்றோர் சிறுவர்களுக்கு விளையாட்டுத் துப்பாக்கிகள் போன்றவற்றைப் பரிசாக அளிக்கின்றனர். அது துன்புறுத்தும் செயல்களுக்குத் தூண்டுதல் அளிப்பதாகும். அவ்வாறே, குற்றச்செயல்கள் சார்ந்த காட்சிகள் நிறைந்த திரைப்படக் காட்சிகள் முதலியவற்றைப் பார்ப்பதிலிருந்தும், துன்புறுத்தும் செயல்களின்பால் மனதைத் தூண்டும் விளையாட்டுக்களிலிருந்தும் அவர்களைத் தூரமாக்கிவைக்க வேண்டியது முக்கியமானதாகும்.

---

* *குற்றச்செயல்/ குற்றம் (Crime): activities that involve breaking the law / an illegal act or activity that can be punished by law / any offence against the law – சட்டப்படி தண்டிக்கப்படத்தக்க/சட்டத்தை மீறுகின்ற செயல்.*
* *குற்றச்செயலிநர்/ குற்றவாளிகள் (Criminals): Connected with or involving crime/ One who does evil, illegal acts / A person found guilty - குற்றமெனச் சட்டம் கூறுவதைப் புரிந்ததாகக் கூறப்படும் நபர்.*
* *வன்செயல்/ வன்முறை (Violence) : உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து விளைவிக்கும் வகையில் செயல்படும் முறை.*
* ***Interpol:** An International Organization that enables the police forces of different countries to help each other to solve crimes.*

**தமிழாக்கம்:**
எம்.ரீ. ஸெய்னுர் றிஃபா

........................................

**Translated into Tamil by:**
M.T. Zainur Rifa

---

**தமிழாக்கம்:**

***குற்றமே காக்க பொருளாகக் குற்றமே***
***அற்றம் தரூஉம் பகை***

***(குறள் 434)***

***குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்***
***சுற்றமாய்ச் சுற்றும் உலகு***

***(குறள் 1025)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு :
பஃவ்ரல் அமைப்பு
12/3, றொபர்ட் டைரஸ்,
றொபர்ட் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 6.
தொலைபேசி - 011-2514441-2 / 011-5557010
தொலைநகல் - 011-5557012
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org